அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page – No – 365 –

மலர்: 9 இதழ்: 8 விலை 25 ந.பை	ஹேவிளம்பி ஞு கார்த்திகை மீ நவம்பர்—டிசம்பர் '57	வருட சந்தா ரூ. 2-4-0

ACC · NO · 18582.

வறுமையிலும் சூதாடி முதன்மை அறம்
வளர்த்த மூர்க்க நாயனார்.

பெரியபுராணச் சித்திர விளக்கம் 44; பக்கம் 339

உள்பொருள்

பக்கம்

1. அகஸ்தியர் முருகன் 6 (திருப்புகழ் மணி) ... 337
2. மூர்க்க நாயனுர் (கி. வா. ஜகந்நாதன்) ... 339
3. அறிவெனும் உடைமை (ஸ்ரீமதி சிவானந்த விஜயலக்ஷ்மி) ... 341
4. ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி (திருப்புகழ் சதுரர் சே.த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.)... 352
5. அணிசெவ்வி வடதிருமுல்லை வாயில் திருப்புகழ் (குகஸ்ரீ) 357
6. கீதை காட்டும் பாதை (அ. ராமமூர்த்தி) ... 364
7. மலையும் மார்பும் (கி.வா.ஜ.) ... 367
8. பக்த சாமளர் (ரஸபதி) ... 370
9. கண்கண்ட தெய்வம் (மா. ப. தியாகராஜன் B.A.,) ... 381
10. Temple Trustees in Conference (*Thiruppugal Mani*) ... 383

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 விதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 9	ஹேவிளம்பி௵ கார்த்திகை௴ நவம்பர்-டிசம்பர்—57	இதழ் 8

அகஸ்தியர் முருகன்—6.

(திருப்புகழ் மணி)

சிவயோகி ஸித்தானந்தர் அவர்கள் வெளியிட்ட பக்திப் பாடல்களில் அகஸ்தியர் உலகுக்கு உரைக்கும் தீர்மானமான உபதேசம் வெளியாகின்றது. வாழ்க்கை உன்னதமான வகையில் நடத்த விரும்புவோர்களுக்கு அகஸ்தியர் போதிப்பது என்னே!

"தத்துவ வாதங்களும் தன் ஆணவ
சஞ்சல பேதங்களும்
சித்தத் திரைகளும் போய் அருட்பெரும்
சிந்தனை ஓங்கியதே
முத்தமிழ் தேன்மலரில் ஞானமனம்
மொய்க்கத்திறம் படைத்தேன்
உத்தம வாழ்க்கை யொன்றே
உயர்ந்ததென்று—
உண்மையைக் கைபிடித்தேன்"

அன்பர் உளத்திருந்தான் ஆன்ம நினைவறிந்தான்
இன்பதுன்பம் ஈந்தான் இறையவனென் றோர்ந்தேனே.

"மாசற்ற உள்ளத்திலே—உன் பாதத்தை
வைத்து வணங்குவதும்
ஆசையை போக்குவதும்—எல்லோரையும்
அன்புடன் நோக்குவதும்
ஏசற்ற இந்நிலையில் மிக்கதொன்றும்
இல்லையென்றே தெளிந்தேன்
ஈசற்கு மந்திரத்தைச் சொல்கின்ற
என்குரு நாயகனே!"

கடவுள் பக்தியும், எல்லாவுயிர்களையும் தன்னுயிர் போல் நினைந்து யாவர்க்கும் அன்பு சொல்லி ஒழுகும் பண்பும், ஆசாபாச காமக்ரோதங்களை அறவே களைவதும் உத்தம வாழ்க்கையின் இன்றியமையாத குணங்களாகும். எங்கும் பரந்த கடவுள் எல்லா உயிர்களுக்கும் உயிர்க்குயிராய் இருப்பதால், உலகம் பரந்த அன்பன்றி வேறு ஒன்றும் வீட்டின்பம் பெற உதவாது.

ஆகையால்தான் ஈசாவாஸ்ய உபநிஷத், எல்லாப் பொருள்களையும் ஆன்மாக்களையும் தன்னுள்ளும், தன்னை எல்லா ஆத்மாக்களிலும் பார்ப்பவன்தான் ஸமதர்சனம் பெறமுடியுமென்றும், ஸமதர்சனம் பெற்றாலன்றி துக்கம் நீங்கி நித்ய பேரின்பம் அடைய முடியாது என்றும் சொல்கிறது.

கீதையில் க்ருஷ்ண பகவான், தெய்வத்தை எங்கும் நிறைந்தவனாகக் கருதி பக்திசெய்ய வேண்டுமென்று உரைத்தார். ஔவையார் சொல்வதும் அதுவே.

"ஈசனெனக் கருதி எல்லா உயிர்களையும்
நேசத்தால் நீ நினைந்துகொள்"

அகஸ்தியாதிகள் சொல்லிய உபதேசத்தால் உலகம் சாந்தியில் ஓங்குக!

காணும் பொருளெவையும் கண்ணன்கை வண்ணமெனக்
காணும் திருவாளர் கான்மலரெம் சென்னியதே

மூர்க்க நாயனார்

(கி. வா. ஜகந்நாதன்)

சான்றோர் பலர் வாழும் தொண்டை நன்னாட்டில் பாலாற்றின் வடகரையில் உள்ளது வேற்காடு என்னும் திருத்தலம். அங்கே வேளாண் மரபில் உதித்த ஒருவர் சிறந்த சிவனடியாராக விளங்கினார். திருநீற்றைச் செல்வமாகப் போற்றிச் சிவபெருமானை வழிபட்டு வாழ்ந்த அவர் அடியார்களிடத்தில் அளவற்ற அன்புடையவரானார். நாள்தோறும் அடியார்களுக்கு ஆறு சுவையும் பொருந்தும் அமுது செய்வித்துப் பின்பே உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டார். இந்த வரையறையினின்றும் ஒருநாளும் வழுவாமல் ஒழுகி வந்தார்.

அவர் அமுது செய்விக்கிறார் என்ற செய்தி நாடு எங்கும் பரவியது. அது கேட்டு நாளுக்கு நாள் மிகுதியான சிவனடியார்கள் அவரை நாடி வரத் தலைப்பட்டார்கள். அவர்கள் யாவருக்கும் முகம் கோணாமல் விருந்துணவு அருத்திப் பின்பு எஞ்சியதை உண்டு இன்புற்றார் அவ்வன்பர். கணக்குக்கு மிஞ்சிய அடியார்கள் வந்தமையால் அவரிடம் உள்ள பொருள் மெல்ல மெல்லக் கரையத் தொடங்கியது. நிலத்தை விற்றும் பண்டங்களை விற்றும் தம்முடைய குறிக்கோள் தவறாமல் நடந்து வந்தார். இப்படிச் சில காலம் கழிந்த பின் விற்பதற்கு ஒரு பொருளும் இல்லாத நிலை வந்தது. தாம் உண்ணாமல் பட்டினியாகக் கிடந்தாலும் அடியார்களுக்கு விருந்து செய்யாமல் வாழ இயலாது என்ற உறுதியை உடையவர் அவர். இனி என் செய்வது என்று ஆராய்ந்தார்.

அவர் இளம்பருவத்தில் சூதாடும் வித்தையைக் கற்றிருந்தார். அதில் பேராற்றல் உடையவராகவும் இருந்தார். இப்போது அது நினைவுக்கு வந்தது. மீட்டும் சூதாடி

இருமையினும் பேறதனை எய்துவிக்கும் அன்னார்
பெருமைதரும் சேவடியை என்னிதயம் பேணுமரோ

அதனால் வரும் பொருளைக் கொண்டு அடியாருக்கு அமுதூட்டலாம் என்று தீர்மானம் செய்தார். அவ்வாறே செய்யத் தொடங்கவே, அவரிடம் பொருள் சேர்ந்தது. அடியார் பசியைப் போக்கி வந்தார்.

அவருடன் சூதாடித் தோற்றவர்கள் பலராயினர். அந்த ஊரில் அவரோடு சூதாட வருவார் யாரும் இலராயி யினர். அதனை அறிந்த அவ் வன்பர், "இனி இவ்வூரில் இருந்து பயன் இல்லை" என்று எண்ணி, இறைவன் எழுந்தருளி யிருக்கும் தலங்களை நாடிச் சென்றார். ஓர் ஊருக்குச் சென்று இறைவனைத் தரிசிப்பது, பிறகு அங்குள்ளாருடன் சூதாடுவது, அதனால் கிடைக்கும் பொருளைக் கொண்டு அடியார்களுக்கு அமுதூட்டுவது, பிறகே தாம் உண்பது— இப்படியாகச் சில காலம் செய்து வந்தார். பல ஊர்களுக்குச் சென்று அவ்வவ் வூர்களில் சூதாடுவார் இல்லாமற் போக, வேறு ஊர்களுக்குப் போனார். 'ஏதேனும் பெரிய நகரமாக இருந்தால் அங்கேயே தங்கிவிடலாம்' என்று எண்ணிய அவர் கடைசியில் திருக்குடந்தையை அடைந்தார்.

எவ்வளவு காலம் இருந்தாலும் சூதாடுவார் கிடைப்பார் என்ற நம்பிக்கை அங்கே உண்டாயிற்று. இப்போது ஒரு புதிய தந்திரத்தை அவர் மேற்கொண்டார். சூது ஆடும்போது முதல் ஆட்டத்தில் அவர் தோல்வி யடைவார். அப்போது அவருடன் ஆடுபவருக்கு ஊக்கம் உண்டாகி விடும். அடுத்த முறை பெரும் பணயத்தை வைப்பார். அந்த ஆட்டத்தில் அவ்வன்பர் வென்று விடுவார். இப்படியாக அவர் பொருள் ஈட்டினார். தாம் வென்றபோது பொருளைத் தர மாட்டோம் என்று யாரேனும் முரண் செய்தால் அவர்களை அச்சுறுத்தியும் உடைவாளால் குத்தியும் பொருளைப் பெறுவார். இதனால் அவருடன் சூது ஆடுபவர்கள் ஏமாற்ற மாட்டார்கள். அவரிடம் மிகவும் அச்சம் கொண்டிருந்தார்கள். அவருடைய இயல்பு கண்டு யாவரும் அவரை மூர்க்கர் என்று வழங்கத் தொடங்கினர்.

அன்பும் அருளும் அறிவினது கண்களெனும்
இன்பினரை எந்நாளும் ஏத்துகின்ற தெந்நாவே

அதுமுதல் அவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியாமல் மறைந்து போயிற்று.

சூதினில் தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு உணவுக்குரிய பண்டங்களை வாங்குவார்; சமையல்காரர்களைத் திட்டம் செய்வார். நாள்தோறும் அடியவர்களுக்கு அமுதூட்டுவார். ஒவ்வொரு நாளும் பல பந்திகள் நடைபெற்றும், அவர் தமக்கென்று அப்பொருளிற் சிறிதும் எடுத்துக் கொள்வதில்லை. எல்லோரும் உண்ட பிறகு கடைப் பந்தியில் அவர் இருந்து உண்ணுவார்.

தம்முடைய கடைப்பிடியை விடாமல், சூதினால் பொருள் பெற்றபோது பொருளாசை பெறாமல், அடியவர்களை அருத்துவது ஒன்றையே வாழ்க்கைப் பயனாகக் கொண்டமூர்க்கநாயனார், இறுதியில் இறைவன் திருவடியை அடைந்து பேரின்ப வாழ்வு பெற்றார்.

அறிவெனும் உடைமை

(ஸ்ரீமதி சிவானந்த விஜயலக்ஷ்மி)

[அன்பெனும் செல்வத்தைப் பெற்ற நாம் அறிவு எனும் உடைமையைப் பற்றியும் இங்கு அறிவோமாக! அதன் மூலம் மேன்மையும் பெறுவோமாக.]

அறிவு—இது ஆண்டவன் மனித இனத்திற்கு எனப் பிரத்தியேகமாக வழங்கிய ஒரு உடைமையாகும். இது எத்தாலும் அழியாதது. எவராலும் கவரப் படாதது. கள்வர் பயம் இதற்கில்லை. மதிப்பு மாற்றத்தால் நஷ்டமுமில்லை. ஆம்—குறைபாடற்ற உடைமை. ஜடமான உடைமைகளான மனை, நிலம், பணம் போன்று இது அழியக் கூடியதல்ல. இவ்வுடைமை படைத்தவன் அனைவரிலும் மேம்பட்டவன் ஆகிறான். ஆனால் 'அறிவு'— வெற்றறிவாக இருந்தால் அவனது நெஞ்சம் வரண்டு இருக்கும். அதிலே நிறைவு காண முடியாது. புறத்திலே இதனைச்

வானும் கடலும் நிலமும் மலையாதி
ஊனும் உயிரும் உமைகுமர னென்பாரே

செலவிட்டுப் பெருக்கினால் அதன் பயன் விபரீதமாக முடியும். அறிவின் சக்திக்கு அளவில்லை. அதைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது மனிதனின் கடமை. ஆனால் 'தனி' அறிவுக்கு மனச்சாட்சி (concience) கிடையாது. தனி அறிவை உபயோகிப்பதால்தான் கேடுகள் பல ஏற்படுகின்றன. நெப்போலியனைப் போன்ற அறிவாளி உலகிலே தோன்றியதில்லை. ஆனால்......என்ன பரிதாபம்!......அவரது அகமும் அதற்கேற்ப வளரவில்லையே......! இதுதான் நமக்கு நல்ல படிப்பினை. அறிவோடு அகத்தையும் பேணினால்தான் அறிவு நமது உடைமையாகும். அறிவை நமது உடைமை யாக்காவிடில் அது நம்மை அதற்கு உடைமை யாக்கிவிடும்! அறிவை நம் ஏவலாளாக்குபவன் அறிவாளி யாகிறான்! அவனைக் காட்டிலும் சிறந்த செல்வந்தர் வேறு எவருண்டு!

அறிவு—இது ஒரு பாலம். மனிதனையும் தெய்வத்தையும் இணைக்கும் பாலம். ஆனால் இப்பாலத்தின் கீழே பல எதிர்ச் சக்திகள் காட்டாறுபோல் ஓடிக் கொண்டிருக்கிறது. இவ்வோட்டத்தின் வேகத்தால் பாலத்தின் தூண்கள் அசைந்து ஆடிவிட்டால்—அத்தனையும் அழிந்துவிடும். அதன் மேலேறிச் செல்லும் நம் கதி......(அரியலூர் ஞாபகம் வருகிறதா?) ஆனால் எதிர்ச் சக்திகளை எதிர்த்து நிற்க பாலத்தின் தூண்களுக்கு அருள், அறம், சத்தியம், அன்பு எனும் நல் அஸ்திவாரத்தைப் போட வேண்டும்—அடிக்கடி அவற்றின் வலிவையும் ஆராய்ந்து பார்த்து, பின் பாலத்தில் நமது வாழ்க்கை வண்டியை ஓட்டிப் பரம்பொருள் எனும் மற்றொரு முனையை அடையலாம்.

அறிவு—இது ஒரு விளக்கு. அவரவரது பரிபாகத்திறகு ஏற்பப் பிரகாசமளிக்கும் விளக்கு. எப்பொருளிடத்து இதனைத் திருப்புகிறோமோ அப்பொருளின் மெய்ப்பொருள் காட்டும் விளக்கு. காணும் பொருட்களெல்லாம் வெவ்வேறான நாமமும், ரூபமும் கொண்டிருந்த போதிலும், எல்லாம் இறைவனின் திரு உருவமே என்பதைக் காட்டும் விளக்கு. ஆனால் பலருக்கு இது கை

கண்ணும் கருணைப் பரமான கண்ணனையே
எண்ணார்கட் கின்பம் இயைய வருமேயோ

விளக்காக (torch) த்தான் இருக்கிறது. கைவிளக்கு, திருப்பிய பக்கம் ஒளி இருக்குமே யல்லாது ஏனைய பகுதி களில் இருள் சூழ்ந்து கொண்டுதான் இருக்கும். அதுபோல இன்றைய உலகிலே அறிவெனும் கைவிளக்கு உலகப் பொருட்கள்பால் திருப்பப்பட்டுள்ளது. அதன் பின்னே பரம்பொருள் ஒன்று உண்டு என்பதை அது காட்டுவ தில்லை. அறிவு பெரும் வெள்ள விளக்காக (Flood-light) ஆக வேண்டும். குறிப்பிட்ட பொருளை, உலகப் பொருளை அறிவது அபர அறிவு ஆகிறது. பர அறிவு பரம்பொரு ளைப் பற்றியது. அவ்வறிவு பெற்றவருக்கு எல்லா அறிவும் தானே கிட்டி விடுகிறது. எது எல்லா அறிவுக்கும் நிலைக் களமோ அதை அறிந்த பின், அறிவதற்கு வேறு எது இருக்கிறது. பெரும் விளக்கினால் சுற்றிலுமுள்ள எல்லாப் பொருள்களையும் காண்பதற்கு இதனை ஒப்பிடலாம். சிலரது அறிவு கலங்கரை விளக்காக விளங்கும், அந்த ஜோதி அறிவினர் தொலைவிலே, நடுக்கடலிலே, அலை களால் அலைப்புண்டு, சுழல் காற்றில் சுற்றித் தடுமாறும் பல சிறு படகுகளைக் கரையேற்றும் பேரறிவாளர்களாக விளங்குகின்றனர்.

அறிவு—இது நமது குதிரை. நாம் சவாரி செய்ய சர்வேஸ்வரன் அளித்த குதிரை. குதிரையை அடக்கி ஓட்டி அதனால் பெறும் பயனை அடைய முயல வேண்டியது நமது கடமை. குதிரையை நம் கைக்குள் அடக்க அதற்கு அன்பு, அறம் எனும் கடிவாளத்தைப் பூட்ட வேண்டும். கடிவாளமில்லாது இக்குதிரைமீது ஆரோஹணிப்பவர் களின் செயல் அபாயகரமானது. அழிவு எனும் படுகுழி யில் நம்மைத் தள்ளி, மண்ணையும் தூவி மூடிவிடும்! அறி வின் வேகத்துடன், அன்பின் கட்டும், பண்பின் பராமரிப் பும் கலத்தல் வேண்டும். இஃது இல்லாத அறிவு காட்டிலே மலர்ந்த மலரைப் போல பயனின்றிப் போகும்.

அறிவு—இது ஒரு விளைநிலம். வளமான விளைநிலம். இதிலே பயனுள்ள தானியங்களைப் பயிரிட்டால் பலவாகப் பெருகிப் பயனளிக்கும். இவ் விளைநிலத்தில் சீராகப் பயி

உலகம் புனிதமுற ஓங்கவுயர் ஞானம்
இலக வழிகாட்டும் மேலோரை எய்துதுமே

ரிட்டு அதன் பயனைத் துய்த்தவர்களே நமது பண்டைய பெருமக்கள். பக்தியும், ஞானமும் இதிலே விளைந்து வந்த நற்பயிர்களாகும். நாட்டிலே காணும் எண்ணிலா திருக்கோயில்களும், சிற்பங்களும், சித்திரங்களும், இவ்விளைநிலத்தில் பக்தியைப் பயிரிட்டதன் பயன். ஆனால் இச்செழித்த பூமியைச் சீராகக் கவனிக்காதிருப்பின் இங்கு நல்ல தானியங்களுக்குப் பதிலாகக் கொடிய நச்சுப் பயிர்களும், பயனற்ற முள் செடிகளும் படர்ந்து வளர்ந்து பலரையும் கெடுக்கும். இவ் விளைநிலம் சும்மா இராது. எனவே, அதை நன்முறையில் பயன்படுத்தினால் நமக்கு நன்மை உண்டு. இல்லையேல்......!

அறிவு—இது ஒரு கண்ணாடி. பரம்பொருளைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி. எது அவன் ஊர், எது அவன் பேர், யார் உற்றார், யார் அயலார் என்று அறிய உதவும் கண்ணாடி. ஆம், மாயக் கண்ணாடி. இதன் முன் நாமும் நின்று, நம்பிடத்துள்ள குறைகளையும் குணங்களையும் காணலாம்—புறத்திலல்ல அகத்தில். நம்மைப் பார்க்கவென வழங்கப்பட்ட கண்ணாடியில் பிறரைப் பார்த்து, அவரது குறைகளை அறிவதில் பயனுண்டோ! நமது தன்மையை அறியவும், பரம்பொருளின் வடிவத்தை, பிம்பத்தைக் காணவும், அப்பரம்பொருளின் வடிவிலே நாம் வளருகிறோமோ என்பதைப் பார்த்துக் கொள்ளவும் இதனைப் பயன்படுத்த வேண்டும்.

அறிவு—இது மலை போன்றது. மலையின் உச்சியிலே புல் பூண்டும் வளருவதில்லை. வெண்பனிச் சிகரங்களே காட்சியளிக்கின்றன. அறிவு மாத்திரம் பெருகினால் அஃது உணர்ச்சிகளற்ற, மரத்துப் போன உள்ளமாகி விடுகிறது. அத்தகைய அறிவின் பயனே இன்றைய அணுகுண்டு போன்ற அதிசயப் பொருட்களாக வந்துள்ளது. இத்தகைய அறிவு மாத்திரம் பெருகினால் உலகிலே அழகு செய்த அநாகரிகமும் (civilised barbarism) மறைக்கப்பட்ட மிருகத்தனமுமே (disguised animalism) நடமாடக் கூடும். மலையின் உச்சியில் எவராலும் வாழ இயலாது.

மதியின் களங்ககன்றார் மன்னுகலை துன்னுபொருள்
கதிவேட்கை கொண்டார்க்குக் காட்டுநரும் அன்னவரே

அவற்றால் பயனுமில்லை. அங்கு மூடி நிற்கும் வெண்பனிச் சிகரங்களினின்று ஆண்டவனின் அருள் ஞானம் எனும் சூரியகிரணம் பட்டு பனி உருகி ஆறாகப் பெருகி, சமவெளி யில் பாய்ந்தால் அவற்றால் பயன் உண்டு. அத்தகைய அறிவாளிகள் கண்ட பொருட்கள் அன்பெனும் சூரிய வெப்பத்தால் உருமாறி உலகுக்குப் பயன் அளிக்கக் கூடும். அணுவைப் பிளந்த விஞ்ஞானிகளின் அகத்தில் அன்பு சுரந்தால், அச்சக்தியைக் கொண்டு உலகில் பல காரியங் கள் (நாச காரியமல்ல) செய்யலாமல்லவா!

அறிவு—இது ஒரு அருவி, மலையுச்சியினின்று பாயும் அருவி. இதைக் கொண்டு பல கருவிகளை இயக்கி மின் சக்தியைத் தோற்றுவித்தால் பல்லாயிரக்கணக்கான வீடு களில் விளக்கு ஏற்றலாம். அறிவின் பெரும் வேகத்தைக் கொண்டு அறம் அன்பு எனும் கருவிகளை இயக்கி, பயனுள பல உபதேசங்களைத் தந்து பல அன்பர்களின் அகங்க ளாகிய இல்லங்களில் பரம்பொருளைப் பற்றிய ஞானம் எனும் விளக்கை ஏற்றுவிக்கின்றனர் அறிஞர்கள்.

அறிவு—இது ஒரு நெருப்பு. ஆம்—தொட்டால் சுடும் நெருப்பு. இந்நெருப்பு எல்லோருக்கும் அவசியம். ஆனால் இதில் கையைச் சுட்டுக் கொள்ளாது ஆகாரத்தைப் பாகம் செய்து பக்குவமாக்கி, சுவையுடன் உண்பது நமது சாமர்த் தியம். ஒரு மனிதன் வெறும் உணர்ச்சிக் குவியலாக இருப்பானாகில் அவனால் உலகில் வாழ முடியாது. உணர்ச்சி வேகத்தில் தடுமாறி அலைப்புண்டு நிரை நேரிடும். அதே சமயம் அறிவுக் கல்லாக அவன் இருந்தா லும் பயனில்லை. அறிவெனும் வெப்பமும், அன்பு எனும் தட்பமும் போதிய பாங்கிலே நம்மிடத்து கலந்து இருத்தல் வேண்டும். இதைத்தானே இறைவனும் விளக்குகிறான். அழல் மேனியரான எம்பெருமான் கரத்தில் அனலும் சிரத்தில் புனலும் தாங்கி, உலக சக்கரத்தைச் சுழற்றும் திருத்தாண்டவம் புரிகிறாரல்லவா, அன்பும் அறிவும் கலந்ததாக வாழ்க்கை அமைந்துவிடில் அதுதானே பண்டும் பயனும்!

உள்ளத் திருளொதுக்கி ஊனமகல் ஞானதிரு
அள்ளியருள் வாரை அணைவதுவும் என்றேயோ

அறிவு—இது சந்திரனைப் போன்றது. இதன் கிரணங்கள் எங்கும் சமமாகப் படுகிறது. ஆனால் இடம் வாய்ந்த நிலம் அதன் கிரணங்கள் பட்டதால் எவ்வித மாறுதலும் அடைவதில்லை. நெகிழ்ந்த நீள்கடலோ சந்திரனின் அலைகளைக் கண்டதும் அலைகள் எனும் கரங்களைப் பரப்பி, பேரிரைச்சலுடன் எழும்பிக் குதிக்கிறது. இடம் வாய்ந்த பண்பாளர்கள் தமது அறிவின் மேன்மை காரணமாக ஆர்ப்பாட்டம் செய்வதில்லை, ஆரவாரிப்பதில்லை—அமைதியாக, அசையாது இருக்கின்றனர். ஆனால் உறுதியடையாத அறிவாளிகளோ 'அறிவு-பகுத்தறிவு' என்றெல்லாம் பேசி எழும்பிக் குதிக்கின்றனர். கடலின் அலைவுக்குக் காரணமான சந்திரனைக் குறை கூறுவது ஒவ்வாது. கடலின் தன்மையைத்தான் சொல்ல வேண்டும். அதுபோல...... உறுதியான நிலம் போன்ற பெருமக்கள் நாட்டில் பலர் தோன்றுவார்களாக!

அறிவு—இது ஒரு கடிகாரம். ஆம். நமக்குள் ஓடும் கடிகாரம். நம் பொருட்டு, நாம் செலவழித்த காலம் எத்தனை என்பதைக் காண இதனை உபயோகிக்கலாம். இக் கடிகாரத்தைப் பார்த்ததன் பயனாக "எனக்கென யாவும் படைத்திட நாளும் எடுத்திடு காயம்தனில் ஓயாது" என்று அறிஞர்கள் கூறுகின்றனர். கடிகாரத்தைக் கட்டிக் கொள்வது பிறர் பார்த்து பெருமைப் படுவதற்கல்ல. தனது சொந்த உபயோகத்திற்கு. அறிவு பிறர் கண்டு அதிசயித்துக் கொண்டாட அல்ல, நமது உபயோகத்திற்கு. ஆத்ம லாபத்திற்கு அதனைப் பயன் படுத்துபவரே அறிவாளிகள்.

அறிவு—இது ஒரு பழம். பரம்பொருள் நமக்களித்த பரிசுப் பழம். இதனைக் கையில் வைத்துக்கொண்டு, ஆனால் சுவைத்துப் பாராது, இதன் பெருமைகளையும் பயன்களையும் பற்றிப் பெருவாரியாகப் பேசுகின்றனர். (சமயத்தைப் பற்றி அதிகம் பேசுவது போல) வாயினால் அறிவை அறிய இயலாது. அநுபவத்தில் உணரவேண்டும். வாயால் கூறுவதால் பழத்தினைச் சுவைத்த பயன் கிட்டாததுபோல இப்

அறமறிந்தே வாய்மை யறிவறிந்தே தெய்வத்
திறமறிந்தே நின்றார் திருவானர் ஆவாரே

பழத்தை இலேசாகச் சுவைத்தாலும் போதாது. அதனை முழுதும் உண்டு ஜீரணிக்க வேண்டும். ஆம். அறிவற்று-அறியாமையுமற்ற நிலை பின்னரே கிட்டும். அறிவு காணும் உண்மைகளை ஆண்டவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். வாழ்க்கையிலும் பயில வேண்டும்.

அறிவு—இது ஓர் மாளிகை. புறத்தில் பல கவர்ச்சிகளும் அலங்காரங்களும் நிறைந்த மாளிகை. ஆனால் இதன் அஸ்திவாரத்தைப் பற்றி மிக அக்கறை காட்ட வேண்டும். வீட்டைக் கட்டி முடித்த பின் அஸ்திவாரம் போட இயலுமா? ஆரம்பத்தில் அஸ்திவாரத்தைக் கெட்டிப் படுத்துவது முறை. ஆனால் இன்றைய கொள்கைகள் இதற்கு மாறாகவன்றோ இருக்கின்றன! இளமையில் இறைவனைப் பற்றியும் பண்பைப் பற்றியும் போதித்து நல்ல அஸ்திவாரம் அமைக்காது, விஞ்ஞானம், ஆராய்ச்சி, இலக்கியம் என்று மேல் மாடிகள் கட்டத் துவக்கி விடுகின்றனர். இவை மனக் குன்றின் மேல் கட்டப்பட்ட மாளிகை போல மண்ணோடு மண்ணாகிப் புதைந்துவிடும் என்பதை அறியவில்லையே! இளமையில் அன்பு, அறம், பண்பு எனும் கல்லும், கான்கிரீட்டும், கம்பிகளும் போட்டு அஸ்திவாரம் பலமாகக் கட்டப்பட்டால் அதன்மீது எத்தனை அடுக்கு வீடும் எழுப்பலாமே. இத்தகைய மாளிகை மன மயக்கம் என்னும் மழையையும், துன்பமெனும் புயலையும், ஆசாபாசம் எனும் ஆடிக் காற்றையும் அமைதியோடு தாங்கி, ஆடாது அசையாது நிற்குமல்லவா. நமது முன்னோர்கள் இதை உணர்ந்தே பண்புக்கல்வியைப் பெரிதெனப் போற்றினார்கள். நம்மவர் கண்களுக்கு இந் நன்முறை தெரியவில்லையே.

அறிவு—இது ஒரு கத்தி. இறைவன் அளித்த இனிய கருவி. இதைக்கொண்டு நல்லதை வைத்துக் கொண்டு தீயதைக் களையலாம். கூர்மையான இக் கருவியைக் கொண்டு எல்லாப் பொருட்களையும் பதம் பார்த்து வேண்டியதை எடுத்துக் கொண்டு, வேண்டாததைச் சேதித்து எறியலாம். சிற்பியின் உளி கல் ஒன்றில் வேண்டாத பகு

இனிய மொழியுடன் இயைந்தமனம் கொண்டார்
கனிவுதரும் தெய்வக் கணத்தோர்கள் ஆவாரே

தியை வெட்டி எறிந்து அழகான சிலையைப் படைப்பது போல நாமும் இதனைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் கத்தியின் தன்மையை அறியாது கையை நறுக்கிக் கொள்வது அறியாமை. குழந்தை ஒன்று அதன் தன்மை அறியாது தவறிழைத்தால் பொறுக்கலாம். ஆனால் அதன் தன்மையை உணர்ந்தும், வீணாக, தீய காரியத்திற்கு அதனைப் பயன்படுத்துவது இழிவான செயல். அறிவைப் பெறாதவன், அறியாதவன் ஆகிறான். ஆனால் அதைப் பெற்றும் துஷ்பிரயோகம் செய்பவன் மூர்க்கன். அறிவு அறத்துடன் தொடர்பு கொண்டால் 'ஞானம்' என்றாகிறது. மறத்துடன் தொடர்பு ஏற்படினோ நாசம் செய்யும் சக்தியாகிறது. மனம் என்ற பாங்கிலே செல்லாது அதை அறிவெனும் அங்குசத்தால் அடக்கி, நல்லதைக்கொண்டு அல்லதைக் களைந்து நல்ல பாதையில் செல்பவனே உண்மை அறிவாளி.

அறிவு—இது ஒரு கோட்டை. நம்மைக் காத்துக் கொள்ள ஆண்டவன் அளித்த கோட்டை. பாவம், அகங்காரம், ஆணவம், மமதை, பொறாமை, அசத்தியம், அடக்குமுறை போன்ற ராக்ஷஸர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்ற இக்கோட்டை கொடுக்கப்பட்டுள்ளது. நாசசக்திகள் நம்மை அண்டாது தடுக்க 'இதைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் இக் கோட்டையே எதிரிகளின் வசமாகிவிடில்...! அவ்வாறு நேராது தடுக்க கோட்டையை பலமுடையதாக்க வேண்டும். அறிவுடன் அன்பு அஹிம்ஸை சத்தியம் அறம் இவற்றைத் துணையாக இருக்கச் செய்தால் எத்தகைய எதிர் சக்தியும் இக் கோட்டையைத் தகர்க்க இயலாது.

அறிவு—இது ஒரு கடல். ஆம். இதன்மேல் நொங்கும் நுரையும், குப்பையும், கூளமும், அலையும், அலைச்சலும் அதிகம். ஆனால் இதன் உள் புகுந்து ஆழத்தில் செலச் செல்ல விலை மதிக்கவொண்ணாத முத்துக்களும், பவழங்களும் கிட்டுகின்றன. மேலே உள்ள ஆர்ப்பாட்டமும் அலைவும், கீழே, அடி மட்டத்தில் இல்லாதிருப்பதைக் காணலாம். இவ்வறிவெனும் ஆழ்கடலில் முத்துக் குளித்தவர்கள் நம்

மனத்தின் இதத்தர் மனிதரெனில், அன்னார்
புனிதத் திருவடியே பூணகக் கொள்வோமே

மூதாதையர்கள். அவர்கள் கண்ட முத்துக்கள் நமது பழம் பெரும் பக்தி நூல்களில் பொதிந்திருக்கின்றன. அவற்றை நாமும் அடைந்து பயன் பெறுவோமாக.

அறிவு—இது தங்கம். ஏதும் கலவாத தங்கம். சொக்கத் தங்கம். சுத்தத் தங்கத்துடன் ஓரளவு தாமிரம் கலந்தால்தான் தங்கம் உருப்பெற முடியும். பற்பல அணி கலன்களாகி நம்மை அலங்கரிக்க முடியும். அறிவெனும் தங்கத்துடன் அன்பெனும் தாமிரமும் கலந்தாலன்றி நல்லுருவம் அமைக்க இயலாது.

அறிவு—இது ஒரு ஊற்று. மனிதனின் வாழ்க்கையை வளமாக்க இறைவன் அளித்த ஊற்று. பூமியில் சில அடிகளே தோண்டியவுடன், மேல் மண்ணில் கிடைக்கும் நீர், சுற்றிலுமுள்ள தேங்கிய அசுத்தங்கள் கலந்ததாக இருக்கும். ஆனால் பாறையைத் தாண்டி அதன் கீழிருந்து எடுக்கும் நீர் மிக்க சுவையுடையதாய், சுத்தமாய் இருக்கும். அதிக ஆழம் தோண்டுவது கடினம்தான். ஆனாலும் தோண்டிவிடுவோமானால் அதன் பயனை எடுத்துச் சொல்ல இயலுமா! அறிவு ஊற்று சில அடிகளினின்று மேலெழுந்த ஊற்றாக இருக்கக் கூடாது. ஆழ்ந்து அகழ்ந்தெடுத்த ஊற்றாயிருப்பின் சுத்த அறிவெனும் நீரைப் பருகக் கூடும். அத்தகைய அறிவே எல்லா அறிவுக்கும் அறிவான பிரம்ம அறிவு ஆகிறது பரமனைப் பற்றிய அறிவு அவனுக்கே அர்ப்பணிக்கப்படுகிறது. யாமோதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததல்லவா? இத்தகைய அறிவு கடைகளில் கிடைக்காது. அடக்குமுறையால் அடைய முடியாது. பராக்கிரமத்தால் பெற இயலாது. இது முயற்சியால், பயிற்சியால், சாதனத்தால் மட்டுமே கிடைக்கக் கூடியது.

அறிவு—இது சூரியனைப் போன்றது. ஆனால் தோற்றமும் மறைவும், உதயமும் அஸ்தமனமும் இதற்கு இல்லை. சூரிய ஒளி பட்ட பொருள் பரிசுத்தமாகிறது. சூரிய ஒளி சுய ஒளி. ஆனால் பலரது அறிவு ஒளி சந்திர ஒளியாய் தண்மையாய் இருக்கிறது. பகலவன் முன் வைத்த பனி

ஈசன் இடத்திருந்தே எப்பொருளும் எய்தியதால்;
பாசமகல் நோக்கிலதைப் பார்ப்பார்கள் பார்ப்பாரே.

கட்டி பாகாய் உருகும். ஆனால் சந்திரனது முன்னிலையில் அது மேலும் குளிர்கிறது. சந்தேகம் எனும் பனிக்கட்டி உண்மை அறிவெனும் சூரியன் எதிரே இருத்தல் கூடுமா? சூரிய ஒளி சுயமானது. ஆனால் சந்திரனது வாங்கப்பட்ட ஒளிதானே! (borrowed light) பல அறிஞர்கள் இன்று சந்திரர்களாகவே இருக்கின்றனர். இது வருந்தத்தக்கது தான்.

அறிவு - இது ஒரு ஜோதி! மனிதனது புத்தியில் அழியாது ஒளிரும் ஜோதி. அறியாமையை அகற்றும் ஜோதி. அன்பெனும் தகழியில் ஆர்வம் எனும் நெய்யிட்டு, சிந்தையைத் திரியாக்கி இஜ் ஜோதியை ஏற்ற வேண்டும். இஜ் ஜோதியின் பிரகாசத்தைக் கண்டு மயங்கக் கூடாது. பல மின்மினிப் பூச்சிகள் மயங்கி, விழுந்து, மரித்ததுண்டு. ஆனால் இதைப்பெற்ற பயனாக அஞ்ஞான இருள் வெளியைக் கடந்து, மெய்ஞ்ஞானம் எனும் பெருஒளிப் பிரதேசத்தை அடைய வேண்டும். இஜ்ஜோதி தான் ஒளிருவதுடன் தன்னை அண்டிய மற்றொரு விளக்கையும் ஏற்றி, அதேசமயம் தனது ஒளியும் குன்றாது விளங்கும். இதுவே 'ஞானதானம்' எனும் பெயர் பெறுகிறது. ஆதிசங்கரர் முதல் நமது குருநாதர்வரை பல பெருமக்களும் இஞ்ஞான தானம் புரிந்து பல உள்ளங்களில் விளக்கேற்றி யுள்ளனர். இவ்விளக்கு ஒளிருமிடத்தில் இறைவனும் விளையாடுகிறான். நமது உள்ளத்திலும் இவ்விளக்கு ஒளிருவதாக!

அறிவு - இது ஒரு பொது உடைமை. இதற்கு நாடு, நிறம், மதம், மொழி எனும் பேதம் இல்லை. இது, எவரிடத்திருந்து, எந்நாட்டிலிருந்து, எம்மொழியில் பிரகாசித்தாலும் அனைவராலும் இது போற்றப்படும். இவ்வுடைமையை உண்மையாக உடையவர்களது வாழ்க்கையில் இதன் சுவடு பதிந்திருக்கும். இத்தகைய பெருமக்களின் மூலம் வெளிவந்த உண்மைகள் காலத்தால் மாறுவதில்லை. அவை என்றும் அழியாது. உலகம் உள்ளமட்டும் நிரந்தரமாய் இருக்கும். விஞ்ஞானிகள் முதல் ஆண்டு கண்ட உண்மையை, மறுஆண்டு மற்றொருவரால் மாற்றப்படுவது

ஈசன் சொருபமே எல்லாமென் றோரா
நீசர்க்கே ஞாலம் நெடுந்துன்ப மாகும்மே

போன்ற துயரமான செய்கை இவ்வுண்மையி னிடத்து இல்லை. இவ்வுண்மை எவர்க்கும் எங்கொடியிலும் பயன் படும். இத்தகைய பெருமக்களின் புனித மொழிகளை வாழ்க்கையில் பயின்று, பாவனமடைந்து பேரின்பம் எய்துவோமாக.

அறிவு - இஃது அமைதியற்ற, சஞ்சலமுற்ற ஆத்மா படுத்துப் புரளும் கட்டிலல்ல. அலையும் மனது ஓடித்திரியும் திறந்த வெளியுமல்ல. மமதை கொண்ட மனம் எழுப்பும் கோபுரமுமல்ல கலகமும் குழப்பமும் கைகலக்கும் 'கோதா'வுமல்ல. இலாபமும் விற்பனையும் கொடுக்கும் 'கடை'யுமல்ல. இஃது நம்மைப் படைத்த பரம்பொருளின் பெருமையை, உயர்வை, தரத்தை எடுத்துக்காட்டும் பொக்கிஷ அறை. இவ்வறைக்குள், ஓடும் சலன மனம் படைத்தவன், சஞ்சலமுற்றவன், மமதை கொண்டவன், கலகப்பிரியன், குறை அறிவாளி ஆகியோர் அனுமதிக்கப் படுவதில்லை. பட்டம், பதவி, செல்வம் என்பதற்காக சுண்டு பரிவு காட்டப்பட மாட்டாது. பண்பாடு எனும் உரம்வாய்ந்த மனத்தினரே இப்பொக்கிஷ அறையினுள் நுழைய அனுமதிக்கப் படுவார்கள். அவனுக்கே இதனுள் இருக்கும் மதிப்பிலடங்கா மணிகளின் பெருமை புலப் படும். தான் காணும் மாணிக்கங்களை வாரி பிறருக்கு வழங்குகிறான். கரத்தால் அல்ல. நாவால் - ஆம். அவனது ஒவ்வொரு வார்த்தையும் மணியாகவும் மாணிக்கமாகவும் தானே இருக்கின்றது!

அறிவு - இதன் நோக்கம் என்ன? சிலர், அறியவேண்டும் என்று எழும் ஆவலை (Curiosity) பூர்த்தி செய்வது என்கிறார்கள். சிலர் புகழ்பெறுவது எனவும், சிலர் வாதத்தில் கிடைக்கும் இன்பத்தைச் சுவைக்க எனவும், வேறு சிலர் நம்மைப் பிறரது தாக்குதல்களினின்று காத்துக் கொண்டு ஒரு மதிப்புப்பெற எனவும் பலபாங்கில் பகருகின்றனர். ஆனால் உண்மை அறிவின் நோக்கம் ஆண்டவனது தன்மையை, உருவத்தை அறிந்து அதில் வளருவதே யாகும். ஆண்டவனால் தரப்பட்ட அறிவை அவனுக்கே

ஆறறிவு மெய்யாமேல் அத்தன் திருவருளில்
பேறுபெறும் நோக்கம் பிணையும் இணையுமரோ.

அர்ப்பணிப்பதுதான் உகந்தசெயல், அதுவே உண்மை ஆனந்தம் பயப்பது. ஆண்டவனை அறிவு சிந்தித்தால் ஆண்டவனே அதன் முன் தன் உருவத்தை வெளிப்படுத்து கிறான். இது பரம்பொருளின் பெருங் கருணையாகும்.

புலன் நுகர்ச்சி நீரோட்டம் போன்றது; நிழல்போன்றது. செல்வம் மமதை ஏற்படுத்தி மறைவது. அதிகாரம், அகங்காரம் கொடுப்பது. ஆனால் அறிவின் பயிற்சி அனுபவபூர்வமான ஆனந்தம் அளிக்கிறது. இருந்த இடத்திலிருந்து இஃது எங்கும் செல்லும்; அறிவு எதையும் அஞ்சுவதில்லை. எதற்கும் தயங்குவதில்லை. நெருப்புள்ளும்செல்லும். கடலுள் புகுகிறது. மலையைத் துளைக்கிறது. விண்ணை அளக்கிறது. மண்ணைச் சுழற்றுகிறது. எத்தனையோ புதிய நிலங்களையும் கடல்களையும் தன்னுள் கண்டு பிடிக்கிறது. ஆங்கு சுற்றி களைப்பாறுகிறது. அதிதூரத்திலுள்ள அரும் பொருளைச் சிந்திக்கிறது. அணுவையும் துளைக்கிறது. அறிவிற்குள் அடங்காதது பரம்பொருள் என்பதைக் காண்கிறது. அணுமுதல் அண்டசராசரம் எங்கும் அதன்வடிவைக் காண்கிறது. இதன் பிடிக்கு எட்டாத சிகரமுமில்லை. இதற்குட்படாத அணுவுமில்லை. உலகெலாம் சுற்றிக் கண்டதை தன்னுள்ளேயே காண்கிறது. தன்னைப் பார்க்கிறது தான் ஆகிறது. இத்தகைய 'தான்ஆகும்' அறிவு நமது தனி உடைமையாகும். இவ்வுடைமையைக் கைப்பற்ற இனி முயலுவோமாக!

வாழ்க இறை அறிவு!

ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

குன்றுதோருடல்:

இது ஐந்தாம்படை வீடாகக் கூறப்படும். இதனை மலைநாட்டுப் பதியுள் ஒன்றெனக் கருதினாருமுளர். ஆனால் நமது திருப்புகழாசிரியர் திருவுள்ளப்படி பல மலைகளின்

பிறவிப் பெருந்துயரம், பேதைமதி கண்டகதை
திறவிக்நம் பல்லபல என்னுமது தேர்ந்தேனே.

தொகுப்பே குன்றுதோறுடல் எனப்படும், எனவே மலைக கோயில்களனைத்தும் இப் பகுதியிலடங்கும். இப் படை வீடு அஞ்சத்தக்க அஞ்சு பூதர்களான பொறிகளை ஆட்டு விக்கும் மனத்தின் செயலுக்குரியது. ஆகவே ஐந்தாம் படை வீடாக அமைந்தது போலும்.

பொருள் சிறப்பு:

மனம் சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையுடையது. இதன் சிறப்பியல்புகளை எல்லாம் சென்ற மாத இதழில் விளக்கியுள்ளோம். இது, இறையிருப்பில் திண்ணிய புத்தியுடன் நண்ணிய பத்திசெய்ய நேரின், திடவிய நெஞ்சுடைய அடியரெனப் போற்றப்படும். ஆனால் மலை கலங்கினும் நிலை கலங்காத வன்மை மிக்க பக்தி ஒருவருக்கு அமைவது அம்ம! அம்ம! அரிது! அரிது! முருகா என்றதும் உருகா நின்றும், குமர என்றதும் நாக்குழறு நின்றும், கந்தா என்றதும் கனிந்து கதறியும், ஆடிப்பாடி அரற்றிய அடியார் பலர் தம் பொருளோ, மனையோ, மக்களோ வேறு எதனையோ இழந்தவுடன் அவர்கள் அன்பும், ஆர வாரப் பூசையும், அனைத்தும் காற்றில் பறந்து போனதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். இவர்கள் ஆலயந்தவறாது வழிபட்டதும், அடியார்க்கு ஆற்றிய ஆராதனைகளும், பாடியதும், ஆடியதும் எல்லாம் ஏதோ ஒரு பொருளையோ, ஒரு உறவையோ, ஒரு போகத்தையோ பெறுவதனை ஒட்டியே நிகழ்ந்தனவாகத் தெரிகிறது. இவையனைத்தும் மனத்தின் செயலே. தான் விரும்பியபடி மனைவி, மகப்பேறு, பட்டம், பதவி, பணம்—இவை போல்வன பிற கிடைத்துவிட்டால், மனம் துள்ளிக் குதிக்கிறது. பூசையில் நேசம் பிறக்கிறது; இறைவனிடத்தில் எவ்வளவோ மிகுந்த பக்தி முறுகி எழுகிறது. அவற்றில் எவையேனும் குன்றினால் (குறைந்தால் - சுருங்கினால்) உடனே மனம் தளர்கிறது. பூசையும் நேசமும் இருந்த இடமும் தெரியாமல் ஒளிக்கின்றன. இதனால்தான் இளம் பூரணனாகிய முருகவேள் தன்பால் நேசங்கொண்ட சிந்தையன்பர் உள்ள

தன்னை யறிந்து தனியின்பம் காண்பார்முன்
என்னை யறிய இயலுமெனல் கண்டேனே

மானது அன்பு குன்றி, அறங்குன்றி, சிறப்பொடு செய்தவ மாதியனவும் குன்றுந்தோறும் அவர்களது இதயந்தனில் ஆடல் செய்து அருள் செய்கிருன் என்பதை விளக்கவே குன்றுதோருடலில் விளங்குகின்ருன் என்க.

குன்றும் ஆடலும்:

மக்களது மனம் பலவேறு பக்குவமுடையது. மிக உயர்ந்த நிலை அடைந்திருப்பர் சிலர். ஆயினும் கொஞ்சம் புண்ணியக் குறைவினுல் மிக மிகக் கீழான நோக்கமே கொள்வர். இவர்களது மனத்தைப் பருந்தின் வீழ்வு அல்லது கழுகின் தன்மைக்கு ஒப்பிடலாம். ஏனெனில் மிக உயரப் பறக்கும் பருந்தும் கழுகும், மிகக் கீழான இடத்தில் இருக்கும் பொருளேயோ பிணத்தையோ நாடிக் கீழ் இறங்கும். இவ்வித கழுகு மனத்தவர்களைக் குன்ருமல் மேன்மையுறுத்தவே குமரவேள் "கழுகுமலை" திருக்கழுக்குன்றம் என்ற மலைகளில் அமர்ந்திருக்கிருன்.

பாம்பு மனம்:

பாம்பு விஷமுடையது. சீறி எழுவது. அதுபோல் சீற்றம் நிறைந்தும் விஷக் குணங்கள் மிகுந்தும் உழலும் விழலர்களைக் காப்பதற்கே உரக கிரி (நாகாசலம்), சேஷ கிரி (திருவேங்கடம்)களில் எழுந்தருளியிருக்கிருன்.

புன் மனம்.

சிலருடைய மனம் பொன்னும், மணியும் போகப் பொருள்களையுமே நாடியுழலும். புன்போகம் வேண்டிய புன் மனத்தவர்களை ஆட்கொள்ளவே அவரவர் வேண்டிய வேண்டியாங்குதவும் மலைகளில் கோவில் கொண்டுள்ளான். பொன் விரும்பிஞர்க்கு கநககிரி. வெள்ளி விரும்பிஞர்க்கு ரசதகிரி. மணி விரும்பிஞர்க்கு (ரதன) மணிக்கிரி போன்ற மலைகளில் இருந்து அருளுகின்ருன். கல்மனம் போக்கக் கற்குடியிலும், கொடுமனம் நீங்கக் கொருங்குன்றத்திலும், கோணல் மனம் செம்மை படத் திருக்கோண மலையிலும், குருட்டு மனம் மாறக் குருடி மலையிலும், யோக மனம் கை கூடப் பொதியமலையிலும், விந்து சத்தி விளங்கக் குன்றக்குடி

பயிரில் களையகற்றிப் பல்போகம் காண்பார்போல்
உயிரின் கறையொழியில் ஒண்முத்தி எய்துறுமே

(மயூரகிரி)யிலும், இவினை பாவந் தீர்க்கத் தீர்த்த மலையிலும், தேனுய் இனிக்கும் மனமளிக்கக் கொல்லி மலையிலும், வள்ளியின் மகிமை மனம் காட்ட வள்ளி மலை (வள்ளியூர்) களிலும், ஞான மனந் தழைக்க ஞானமலையிலும், அமைதி மனம் அமைக்க தணிகை மலையிலும், பிறவாத பெருவாழ் வளிக்கக் கயிலைமலையிலும், திருப்பருப்பதத்திலும், முழு தரி சனமளிக்க விராலி மலையிலும், தனது அருவ தரிசனந்தரு தற்குக் கதிர்காமத்திலும், பின்னும் பெறுவார்க்குரிய பேறு களுதவ உலகமெங்கும் உள்ள மலைக் குன்றுகளிலும் செவ் வேட் பரமன் ஆடல் செய்கின்ருன். ஆகவே, இப் படை வீடு குன்றுதோருடல் எனப்பட்டது என அறிக.

மஞேலயம் தரும்

எக்காலத்தும் உருகுதலொழிந்த திணியான மனே சிலே, அதன் திண்மைத்திறம் ஒழிந்து அன்புருகு சிந்தை யாய் ஆண்டவன் அருளில் லயித்து ஒன்றும் நிலே, குன்று தோறும் குமரன் ஆடலால் அமையும். இதனை நோக் கியே "வடிவதாமலை யாவையும் மேவிய தம்பிரானே! பதிய தான சமாதி மனோலயம் வந்து தாராய்" என்று நம் அருண கிரியார் குறிப்பிடுகின்ருர்.

இடர்களெல்லாம் களையும்

உடலுறு துன்பமாஞலும் வேறு துயராஞலும் அவற்றை ஏற்று முற்றிலும் தன்னதாகக் கொண்டு வருந்துவது மனமே யாகும். எனவே இடர்களனைத்தும், உண்டாகும் ஐயங்களனைத்திற்கும் தாயகம் மனமே. பல இடர்களும் தீரவேணுமாயின் பல குன்றில் அமர்ந்த பெருமாஞல்தான் கூடும் என்ற பொருத்தங் காட்டி.

"இதயந்தனிலிருந்து—க்ருபையாகி
இடர் சங்கைகள் கலங்க—அருள்வாயே
....
பதி யெங்கிலு மிருந்து —விளையாடிப்
பலகுன்றிலு மமர்ந்த—பெருமாளே.

பழிபாவம் இல்லார் பரமனருள் தன்ஞல்
அழிவில் வழியெய்தி ஆநந்தர் ஆவாரே

என்பது சிந்தித்தற்குரியது. குகன் இதயத்தில் தங்குவதால் இடரும் சங்கைகளும் அஞ்சி அகலும் என்க.

குன்றவரைக் காக்க

நாகரிகத்தின் அடிப்படை மலையில் தோன்றியது என்ப. குறிஞ்சி நிலமே முதற்கண் இருந்தது. 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி' என்று நம் தமிழுரைப் போற்றுவர். எனவே முதலில் கல் (மலை) தோன்றியது. அதில் வாழ்ந்தோர் குன்றவர் என்ற குறவர். அவர்களது குலதெய்வம் குறிஞ்சிக் குமரன். அப்பெருமானுக்கு ஆற்றிய சிறப்பு வழிபாடு 'வெறியாடல்' எனப்படும். இதில் வேலவன் என்பான் மீது முருகன் ஆவிர்ப்பவிப்பான். அவன் வேலேந்தி ஆடுவான். அதனை அவர்கள் நிகழ்த்துமுறை விசித்திரமானது. இதன் விரிவை திருமுருகாற்றுப்படை ஆறும் படைவீடான பழமுதிர்சோலைப் பகுதி கூறும். அவ்வித 'வேலன் தைஇய வெறியயர்களனும்' முருகபிரான் விரும்பிய யமர் தரு நிலையங்களுள் ஒன்றாகும். இவ்வாறு வேடர்களது வெறியாடலை உடனிருந்து ஏற்று அவர்களுக்கு வாழ்வு தருதற்கென்றே குன்றுதோறாடல் அமர்ந்துள்ளான்.

> "குஞ்சரம் யாளிமேவு பைம்புன மீதுலாவு
> குன்றவர் சாதி கூடி—வெறியாடிக்
> கும்பிட நாடிவாழ்வு தந்தவரோடு வீறு
> குன்றுதோ றாடல் மேவும்—பெருமாளே"

என வருவதும் இதுவே.

மேற் போந்தவைகளினின்று குன்றுதோறாடல் என்ற படைவீடும், திருவேரகத்தைப் போலவே மனத்திற்குரிய செயலை விளக்கி அதனை அவ்வப்போது திருத்திச் செம்மை செய்யவே எழுந்தது என்று அறிகிறோம்.

> "மன்று தோறாடிய வள்ளல் காமுறக்
> குன்றுதோ றாடிய குமரற் போற்றுவாம்"

(தொடரும்)

தீமை சிறிதெனினும் தீய பயன்பெரிதாம்
ஆமை கிணற்றை அளறுசெயல் போல்வதுவே

வடதிருமுல்லை வாயில்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

அணிசெவ்வி யார்திரை சூழ்புவி
தனிலிவ்வி யேகரை யேறிட
அறிவில்வி யாமடி யேனிடர் — அதுதீர

அருள்வல்லை யோநெடு நாளினம்
இருளில்வி லேயிடு மோவுன
தருளில்லை யோஇன மானவை — யறியேனே;

குணவில்ல தாமக மேரினை
யணிசெல்வி யாயரு ணசல
குருவல்ல மாதவ மேபெறு — குணசாத

குடிவில்ல மேதரு நாளெது
மொழிநல்ல யோகவ ரேபணி
குணவல்ல வாசிவ னேசிவ — குருநாதா;

பணிகொள்ளி மாகண பூதமொ
டமர்கள்ளி கானக நாடக
பரமெல்லி யார்பர மேசுரி — தருகோவே;

படரல்வி மாமலர் பாணம
துடைவில்வி மாமத னரனை
பரிசெல்வி யார்மரு காசுர — முருகேசா;

மணமொல்லை யாகிந காகன
தனவல்வி மோகன மோடமர்
மகிழ்தில்லை மாநட மாடினர் — அருள்பாலா;

மருமல்லி மாவன நீடிய
பொழில்மெல்லி காவன மாடமை
வடமுல்லை வாயிலின் மேவிய — பெருமாளே!

(குண வில்லதா......குரு)

(பதவுரை.) மக மேரினை குண வில்லதா அணிசெல்வி ஆய் அருணசல குரு-மகம் மேரு மலையை (மலைமகள் எனும்) பண்பிற்கு

உள்ளச் சிறுமை உயிர்க்கழிவு செய்வதென
எள்ளுவார் சேவடிகள் என்முடிமேல் கொள்வேனே.

உரிய வில்லாக (ஏந்திய) அழகின் செல்வியான (எம்) தாயிடம் இருக்கும் (தந்தையான) அண்ணாமலையார்க்கு (ஓம் பொருளை உபதேசித்த) குருவே!;

(நல்ல யோகவரே பணி......வல்லவா!)

நல்ல யோகவரே பணி-நலம் சிறந்த யோகிகள் வழிபடுகின்ற; குண வல்லவா-எண் குணம் வல்ல எம்பெருமானே!;

(சிவனே......நாதா!)

சிவனே-ஆறுமுகச் சிவனே!; சிவ குரு நாதா-ஒரு தலை மாணிக்கமான நாத குருவே!!

(பணிகொள்ளி......தருகோவே!)

பணி கொள்ளி-(உலகைக் கோலம் செய்) திருப்பணி கொள் பவரும்;

மாகண பூதமொடு அமர் கள்ளி-(சிவத் திருப்பணி செய்) சிறந்த பூத கணங்களுடன் அமைதி தோன்ற எழுந்தருளி யிருக்கும் கள்ளியும்;

கானக நாடக பர மெல்லியார்-(ஞானக்கினி) மயானத்தில் நடம் புரியும் மேலான மென்மை யுடையவரும் ஆன;

பரமேஸ்வரி தரு கோவே-ஞான (அருள்) செல்வி தந்த பதிப் பொருளே!;

(படர் அல்லி......முருகேசா!)

படர் அல்லி-படர்ந்து மலரும் நீலோற்பலமும்;

மா மலர் பரணமது உடை-சிறந்த (தாமரை) மலருமாகிய கணைகளை யுடைய;

வில்லி மா மதனுர் அனை-(கரும்பு) வில் ஏந்திய கனந் தங்கிய காமனுருடைய அன்னை யாகிய;

பரி செல்வியார் மருகா-அன்புச் செல்வியர் எனப் பெறும் திருமகளுடைய மருமகனே!;

சுர-தேவா!; முருகேசா-(இளமையும் அழகும் இன்பமும் மணமுமான) நிறை பெரும் செல்வனே!;

(மணம்......அருள்பாலா!)

ஒல்லை மணம் ஆகி-அதிவிரைவில் மணம் பரப்பி; கன தன நகா வல்லி-பருத்திருக்கும் குயங்களை யுடைய மலைக்கொடியான சிவகாமியார்; மோகனமோடு அமர்-(பெயர்க்கு ஏற்ப) மோகித்து விரும்பும்படி; (அமர்தல் - விரும்பல்.)

உள்ளத்தில் தூய்மை யுடையார் உவந்தினிய
தெள்ளமுத மாகித் திகழ்வதுவும் கண்டேனே

மகிழ் தில்லை மா நடம் ஆடினர் அருள் பாலா-மகிழ்ந்து தில்லையில் ஐம்பெரும தாண்டவம் இயற்றும் கனக சபேசர் அருளிய பால் மணம மாறாத பரமா!;

(மருமல்லி......பெருமாளே!)

மரு மல்லி மாவனம் நீடிய பொழில்-மணம் கமழ் மல்லிகை பெருங் காடுபோல் வளர்ந்த சோலைகளும்;

மெல்லி கா வனம் மாடு அமை-மென்மைப் பூக்காவும் நீர் நிலைகளும் எப்புறமும் அமைந்த;

வடமுல்லை வாயிலின் மேவிய பெருமாளே-வட திருமுல்லை வாயிலின்கண் விரும்பி எழுந்தருளிய பிரம ஸ்வரூபமே!;

(அணிசெவ்வி......அறியேனே.)

அணி செவ்வியார்-(செயற்கைக்) கோலம் சிறந்த (இயற்கை) அழகுடைய மாதர்கள்;

திரை சூழ் புவி-அலைகளை யுடைய கடல் புடை யுடுத்த நிலம்;

தனம்-பொன் (எனப் பெறும்);

நிவ்வியே கரை ஏறிட-(மூவாசைக் கடலையும்) கடந்து கரை யேற;

அறிவு இலலியாம் அடியேன் இடர் அது தீர-அறிவு இல்லாதவனான அடியேன், (அவைகளால் விளையும்) இடர்ப்பாடுகள் அகல;

அருள் வல்லையோ-அருளை வலிந்து அருள்வையோ?;

நெடுநாள் இனம் இருளில்விடே இடுமோ-(அக்ஞானம் செய்யாமல்,) நெடுங் காலம் இன்னம் (ஆணவ) இருளிலேயே இரு என்று விட்டு வைப்பையோ?

உனது அருள இல்லையோ-உனது கருணை (என்னிடம் மட்டும்) இல்லையேதானோ;

இனம ஆனவை அறியேனே-(உனது அருள் பெறுதற்கு உரிய) இனமான வழி வகைகளை (சிற்றறிவினனான) அடியேன் (ஒரு சிறிதும்) அறியாது இருக்கிறேனே,

(வல்ல மாதவமே......மொழி.)

வல்ல மாதவமே பெறு-மகத்தான சிறந்த தவத்தையே (மதித்துச்) செய்யும்;

குண சாத-(சத்வ) குண சாதனைக்கு உரியதான; குடில் இல்லமே தரு நாள் எது மொழி-(உயிர்) குடி யிருக்கும் மாளிகையான (உடலை) அருளல் (நாள்) எந்நாள் என்று திருவாய் மலர்ந்தருளுதியோ, (எ-று).

இப்பிறப்பில் பேரின்பம் எய்தமுயல் கின்றார்க்கு
எய்ப்பினில் வைப்பாகும் இறையருளல் செய்திடுமே

விளக்கவுரை

கரிமனத்தவர் திரிபுர அவுணர்கள். அவர்கள், விஞ்ஞானத்தை விருத்தி செய்தனர். அதன் மூலம், விண்ணில் ஒரு உலகம்; மண்ணில் ஒரு நகர்; பாதலத்தில் ஒரு பட்டணம். இப்படி எப்புறத்தும் மூப்புரங்கள் எழுந்து பறந்தன. பாழும் அலைகளில் இருந்த அவுணர்கள், பிறரைப் பார்த்துப் பல்லிளித்தனர்.

எண்ணிய இடங்களில் இறங்கினர். நலம் சிறந்த மக்கள், அதன் கீழ்ப்பட்டு நசுங்கினர். ஐயகோ என்று அழுது கதறினர் அனைவரும்.

பொறுக்கும் அளவு பொறுத்த சிவனார், எழுந்தார். வாய்த்த வில்லாம்படி மலையை வளைத்தார். நாக லோக வாசுகியை நாணி யாக்கினார். கனலைக் கணை யாக்கினார். பூமியைத் தேராக்கினார். மறைகள் பரிகளாயின. பாரதி கணவர் சாரதி ஆயினர். விரைந்தது தேர்.

தேர் மேல் உள்ள திருவுருவில், பாதித் திருமேனி பரன்; பாதி வடிவம் பராசிவை. இந்த நியதிப்படி, விமலை திருக்கரத்தில் வில். தேவ தேவர் திருக்கரத்தில் தெய்வ கணை. பேசுகின்றாள் பெருமாட்டி.

தேவா! முப்புர அவுணர் தலைவர் மூவர். விண்மீன் கண்ணன், கமலக் கண்ணன், ஞானக் கணக்கன் என்னும் அம் மூவரும், மெய்ஞ் ஞானம் மேவினர்; விஞ்ஞானத்தை வெறுத்தனர்.

ஆரம்பத்தில் அதிசயம்; இடையில் விபரீதம்; அந்தத்தில் அகில உலகு அழிவு; வேண்டா விஞ்ஞான விருத்தி; வேண்டவே வேண்டா என்று பல சொல்லி மறுத்தனர் இணங்கவில்லை அவுணக் குடிகள். மறுத்த அவர்களை மறந்தனர். தம் தம் புரத்தில் இருந்தபடி, என்னை நினைந்தனர். தற்பரா! அதோ பாரும், அவர்களது அக வழிபாட்டை! என்று அறிவித்தாள் அமலை.

தேவி! உரைப்பது உண்மைதான்; எனினும், போங் காலத்திற் சேர்ந்தவர் தாமும் போவார்கள். அதுதான் இயற்கை யென்று அறிவித்தது சிவம்.

வாய்த்த திரிபுரத் தலைவர்கள் வாழ வேண்டும் என்று, கருதிய அம்பிகை கருணையை, கணபதி அறிந்தார். முதன்மையான தேரின் அச்சை முறித்தார். அதனால், தாராளமாக விரைந்த தேர், தடைப்பட்டு நின்றது.

தூயவுளம் இன்பத்தைத் துய்க்கச், சிறப்பிலதாம்
மாயமனம் தாழ்ந்து மடங்குவதும் கண்டேனே.

அதை அறிந்த அமலர், நெடுங்கணை தொடுக்க நினைத்தார், அருள் வடிவ இடக்கரம், அம்பிகைக்கு உரியது. விமல அத்திருக் கரத்தில் வில்; அவ் வில்லைத் தர மறுத்தாள் விமலை.

சிரித்தது சிவம். சிரிப்பில் இருந்து எழுந்த தீ, திரிபுரத்தை எரித்தது. முப்புர வாழ்வு, அதனோடு முடிந்தது. எனினும், கருணாகரியின் அருள் நிழல், திரிபுர மூவரைக் காத்தது. இவ்வரலாறறை,

'குண வில்லதா மக மேரினை—அணிசெல்வி ஆய்' என்பதில் அறிகிறோம்.

குணம்—(இயற்கை அருள) பண்பு. தேவியின் அருள் குணம், எடுத்த வில்லிலும் ஏறியது.

அந்த அணி செல்வியே அனைவர்க்கும் ஆய். ஆயோ மலை மகள்; அத்தரோ அண்ணா மலையார்; அப்பண்பிற்கு அமைய, ஆய் ஏந்திய வில்லுமோ ஒரு மலை. இந்த நயமும இதில் உளது.

"அடிமுடி காட்ட வேண்டும்
அடிமுடி யில்லா வாழ்வே"

அருணாசல நினைவில், இப்படிப் பெரிதும் வேண்டுகின்றார் பெரியோர்.

ஆலை இடம் வைத்த அந்த அருணாசலர், ஞான அழல் பிழம்பானார். பேசா அநுபூதியை, அந்த அருணைப் பெருமாற்குக் குறிப்பில உணர்த்திய குமரனை, 'அருணாசல குரு' என்று அறிகிறது இதயம். இந்நிலை, ஞானத்தில் ஞானம் எனப் பெறும்.

இருந்தாதவரை, அடித்தது திருத்துவது போல்வது ஹட யோகம். அங்ஙனம் இன்றி, சிறக்க அறிவுறுத்தி வளர்ப்பது சிவ யோகம். இதய குகையில் இருப்பானை, எண்ணச் செய்வது அதன் வழிமுறை. இம்முறையில் நினைப்பவர் இதய நாடிகள், குக குக! குக குக! என்று ஏத்திப் பணிந்து இருக்கும். இந்நிலை, ஞானத்தில் யோகம் எனப் பெறும்.

தலைமை தூய்மை தத்துவ உணர்வு;
அருள் வலி இன்பம் அமலம் தெளிவு

என்ற எண்வகைக் குணங்களை யுடையவனை, "நல்ல யோகவரே பணி குண வல்லவா" என, நயமுற விளிக்கின்றது நூ. சிவமானாய்; சிவம் வேறு உளதெனில், அச் சிவத்திற்கு அருள் குரு ஆனாய்.

கொள்ளித்தே ளாகிக் குதிக்காமல் மெய்ஞ்ஞானம்
விள்ளுகின்றார் தாளே விரும்புகின்ற தென்னுளமே

'நாதம் சதாசிவ நற்சன்னி தானம்' என்ருர் பெரியோர்; அதற்கு ஏற்ப 'சததத்தி னுள்ளே சதாசிவம் காட்டி' என்று இனிது கூறுகின்ருரும் இருக்கின்ருர்.

சிவ என்பது, ஒரு தனி மாணிக்கமான அருளொளி. நாத நலத்தொடு, அதை அறிவிக்கும் நல்குரு நீ. ஆதலின், சிவனே சிவ குரு நாதா என்று, அன்பொடு சித்தம் உன்னை அழைக்கிறது.

அகில உலகிற்கும் பணி கூறவிப்பவர் அம்பிகை, ஐம்பூதங் களிலும், தொண்டு செய்வதே தொழிலான சிவ கணங்களிலும், பணைக்குரிய சக்தி தர, கண்ணிற்குத் தோனுமல் கலந்து கரந்திருக் கிருர் அக் கள்ளியார். இதனுல், 'பணி கொள்ளி, மாகண பூத மொடு ஆமர் கள்ளி' என்று எண்ணப் பெறுகிருர் எம் பெரு மாட்டி. இந்நிலை, ஞானத்திற் கிரியை எனப் பெறும்.

மாயா பந்த நாச லலாட நேத்ர ஞானக்கினி மயானத்தில், நடமிடும் அதி சூட்சுமம் ஆனவர் அத் தேவியார். ஏதமிலா அப் பரம ஈஸ்வரி தந்த பதிப் பொருள் நீ; அதனுல் தான், 'கானக நாடக பரமெல்லியார், பரமேஸ்வரி தருகோவே' என்று வாழ்த்தி விளிக்கிறது எங்கள் வாய்,

"பிணைக்கும் அரவிந்தம் நீள்பசலை மாம்பூ
அனைத்துணர்வும் நீக்கும் அசோகம்—வனத்திலுள
முல்லை கடைகாட்டும் மாதே! முழுநீலம்
கொல்லுமதன் அம்பின் குணம்"

எனும் காமனது ஐந்து கணைகளில், காமம் காலூன்றச் செய் கிறது கமல மலர். அல்லி யெனும் நீல மலர், ஆளை அடியோடு கொல்லும்; பொல்லாக் கணைகள இந்த இரண்டே போதுமே! அவைகளை அஞ்சினேன். அதனுல், நீலத்தை முன்னும், நினைவு தரு வதைப் பின்னும கூறினேன்.

வில்லோ கரும்பு, கணைகளோ மலர்கள். இவைகளைக் கொண்டு, அகில உலகையும் ஆட்டிப் படைப்பவரான மன்மத னுடைய அன்னையும, பயனுள செல்வத்தைப் பாலிப்பவருமான திருமகளார் மருகா! போக ஆட்சி புரிபவர் உமது மைதுனர்; பொருளாட்சி புரிபவர் உமது மாமியார்.

நீயோ அமுத போகியான சூரன்; அழகும் மணமும் அருளார் செல்வமும், இனபத தெய்வமுமாக இருப்பவன் நீ. ஆதலின, சூர முருகேசா என்று ஆர்வம் குதியிட அழைக்கின்றேன்.

ஆன்மா குடியிருக்கும் ஆக்கையிது நன்னெறியில்
தான்மேவச் செய்திரெனச் சாற்றுநரைப் போற்றுதுமே.

கன தன மணம் என்பது மாத்திரமா? தேவி திருமேனியும்; அவர் இருந்த இடமும் அருள் மணம் கமழுமே.

அற்புதம் விளைக்கும் ஆநந்தக் கூத்தை, பார்த்த கண் வாய் காது பார்க்கின்ற பலரை, சிவகாமிப் பெயர் கொண்டு சிறக்கின்றார்; அப்படி ஆநந்தக் கூத்து ஆடுகின்ற அத்தர், பாரனைத்தும் பயன்பெற அருளிய பாலனே!

தொண்டை நாட்டில், வழிபடுவார்க்கு மலர் பல உதவும் வட திருமுல்லை வாயிலில் வாழ்பனே! இங்கில்லை, ஞானத்திற் சரியை.

பாழும் என் கதையோ ஒரு பாரதம். அழகிய பெண்கள் மேல் ஆசை; வீடுகள் நில புலங்களில் வேட்கை; கண்ணும் கருத்தும் பணத்தில் தான். அட பாவமே! அறிந்து கரையேறும் அறிவும் இல்லையே! இவைகளால் வந்த இடர்கட்கு எல்லையே யில்லையே!

அவதி இது தீர அருளாயோ? இன்னும் இருளிலேயே இருத்துவையோ? ஏழை யென் விஷயத்தில் மட்டும், மாபெரும் உனது அருள் மலராதோ? என்ன செய்தால் அரிய உனது திருவருளை யடைய முடியும்? அதுவும் தெரியவில்லையே!

ஈஷணாத் திரவியத்தில், ஊறிய இவ்வுடல் உருப்படுவதில்லை.

சிறந்த தவம்செய்வார் பரம்பரையில், அடியேனுக்கு ஒரு உடல் தா; அவ்வுடலி லிருந்து, சிறந்த தவசித்தி தரும் சாதனை பல சாதிப்பேன்; அதன் வழி, உனது அருள் பெறுவேன்!

குருவே! சிவனே! சிவ குருநாதா! கோவே! முருகேசா! பாலா! பெருமாளே! அந்தக் குடில் இல்லம் தரு நாள் எது? திருவாய் மலர்ந்தருள்! என்று விநயமாக வேண்டியபடி.

வாழ்க திருப்புகழ் வளம்!

எண்ணிலா ஆக்கைகளுள் இம்மா னுடஉடலம்
புண்ணியத்தால் வந்த பொருள்புரிந்து கொள்வோமே

கட்டுரை—8

கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

8. குணங்களும் அவற்றின் தாசமும்;—

உலகத்தில் அன்றாடம் எத்தனையோ சம்பவங்களும் செயல்களும் நிகழ்கின்றன. தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கும் உலகம் தன்னில் வாழ்ந்து வரும் மனிதனை யும் ஆட்டிவைக்கிறது. ஏதோ ஒரு சக்தியால் எல்லாம் நடைபெற்றுவந்தாலும் மனிதன் தானே எல்லாவற்றையும் செய்வதாக நினைக்கிறன். வாஸ்தவத்தில் அவன் எது வுமே செய்யவில்லை; பிரகிருதியின் குண தோஷங்களால் கர்மங்கள் எங்கும் நிகழ்கின்றன. ஆனால் மனிதனே அறி வீனத்தால் தன்னையே கர்த்தாவென்று நம்புகிறன். இந்த அறிவீனத்திற்குக் காரணம் அகங்காரம். அதாவது 'தான்' என்ற எண்ணம்.

உண்மையை உணர்ந்தவனுக்கு இந்த மாறுபாடான அறிவு உதிக்காது. இந்திரியங்களின் இயல்பான குணங் களால் ஏற்படுகின்ற தோஷங்களான கர்மங்களுக்கு, மாயை என்ற திரையால் மூடப்பட்டுள்ள இந்த உலகமே காரணம் என்று அறிந்து, கர்மங்களிலோ அவற்றல் ஏற் படும் பலன்களிலோ பற்று அடையமாட்டான்.

உலகத்திற்கும் சரி—தனி மனிதனுக்கும் சரி, இயல் பான பல பொதுப் போக்குகள் தாமே இயங்கிவரும். அந்த இயல்பான இயக்கங்களே குணதோஷங்கள் என்றுகொள் ளத்தகும். புலன்களின் இயல்பான குணங்கள் விஷயத் தில் இச்சையை ஏற்படுத்தும். மனிதனை உணர்ச்சி வசமாக் கும். மனிதன் ஞானத்தினுல் புலன்களின் குணங்களை வென்று, அவற்றை தோஷமற்றதாக்கி, அப்புலன்களை என் றும் தனது ஞானேந்திரியங்களாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

பேறுபல எய்திப் பெருமிதங்கொள் இவ்வுடலுள்
வீறுதர என்றும் விமலஒளி யுள்ளதுவே.

எந்த ஒரு பொருளுக்கும் அதற்கென சில குணங்கள் உண்டு. இந்த குணமே அந்தப் பொருளுக்குத் தோஷம் கற்பிக்கிறது.

குணமற்ற பொருள் பரம்பொருள் ஒன்றேதான். எனவே அது தோஷமற்றது. தோஷமற்ற மனிதன் சுலபமாக அதை அடைந்துவிட முடியும்.

தானே கர்த்தா என்ற அகங்காரம் ஒழிந்தால்தான் மனிதனுக்கு குணநாசம் ஏற்படும். செய்யும் தொழிலிலும் அதன் பலனிலும் பற்று நீங்கவேண்டும். தன்னுடையது என்ற எண்ணம் உள்ளவரையில் இந்த பற்று நசிக்காது. தான் ஆன்மா என்ற அறிவோடு மட்டும் ஆசையை அறவே ஒழித்து காமக்குரோதாதி குண தோஷங்களை அகற்றி செயல் புரிவோனே கர்மயோகி. இந்த கர்மயோகிக்குக் குணம் கிடையாது. நிர்க்குணனாய் இறைவனுக்கு இவன் வெகு சமீபத்தில் இருப்பவன்.

இயல்போடு இயைந்தமைந்த அறிவுடைமையென்று சிலர் எண்ணுகிறார்கள். வாஸ்தவத்தில் பொருளுக்கு ஒரு தனி இயல்போ குணமோ கிடையாது. பஞ்சபூதங்களின் சேர்க்கையாகிய பிரகிருதியால்தான் குணங்கள் ஏற்படுகின்றன. குணநாசம் என்பது பிரகிருதி நாசமும் ஆகும். எந்தப் பொருளிலும் எச்சமயத்திலும் சார்பு அற்ற நடுவு நிலைமையே குணதோஷத்தை நாசம் செய்யும் சாதனமாகும்.

அறிவீனத்தால் பொருளுக்கு குணம் கற்பிக்கப்பட்டு அது தோஷமுடையதாகிறது. நோயாளிக்கு இனிப்பும் கசப்பாவது போல அணுகும் மனிதனின் பண்பை யனுசரித்துப் பொருளின் குணமும் மாறுபடுகிறது.

இயல்பை அல்லது குணத்தை அடக்குவதென்பது முடியாத காரியம். ஆனால் அதை மடை மாற்றித் திருப்பிக்கொள்ள முடியும். மேன்மையான குணம் உண்மையில் குணநாசமே யாகும்.

குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் விருப்பு வெறுப்புகளுக்கு வசமாவது கூடாது. சார்பு மனப்பான்மை சாதகனுக்கு என்றுமே விரோதியாகும்.

கடல்நீந்திக் காணும் கரைபோல வாய்த்த
உடல்புகுந்தே உள்ள உள்பொருளைக் காணீரோ

சுயேச்சையாக சிந்தித்து, ஆராய்ந்து முடிவுக்கு வருவதற்கான ஆற்றல் வேண்டும். பிறருடைய தர்மத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதில் விசேஷமில்லை. நடுநிலைமைப் பண்பு சிறந்த ஆராய்ச்சியையும் தெளிவான முடிவையும் கொடுக்கும்.

காமம் கோபம் இவ்விரண்டும் கொடிய தோஷமுள்ள குணங்களாம். அதிகமான ஆகாரத்தையும் போகத்தையும் வேண்டுவனவாம். கொடியதான பாவத்திற்குக் காரணமானவை. இந்தக் காமம் என்ற திரை ஞானத்தை மறைத்து விடுகிறது. கோபமோ எதையும் அடையவோ அனுபவிக்கவோ இயலாமல் செய்துவிடுகிறது. ஆசையானது அறிவை மறைத்து விடுகிறது.

மனத்திற்கும் அறிவுக்கும் புலன்கள் தான் (இந்திரியங்கள்) இருப்பிடம். புலன்கள் மூலம்தான் அவை தொழில் புரிய வேண்டும். குணங்கள் என்ற தோஷங்களின்றித் தொழில் புரியவேண்டும் என்பது வற்புறுத்தப் படுகிறது. இந்திரியங்கள் அறிவை மறைத்து ஆன்மாவை மயக்குகின்றன.

புலன்களை குணங்களற்றதாக்க வேண்டுமானால் முதலில் அவற்றை வசப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்திரியங்களின் போக்கிலேயே அவற்றை விட்டுவிடாமல் தன் விருப்பப்படியே அவற்றை இயக்கிவர முயல வேண்டும்.

பொருளின் விருப்பப்படி நாம் செல்வது குணதோஷப் பாதை. நமது இஷ்டப்படி பொருளைச் செல்ல விடுவது குண நாசப் பாதை.

புலன்களை அடக்குவது இந்திரிய நிக்ரஹம் ஆகாது. அவற்றின் குணதோஷங்களை நாசம் செய்வதே இந்திரிய நிக்ரஹம் ஆகும்.

குணதோஷமற்ற இந்திரியம் மேலானதாகும். மனம் ஒரு சிறந்த இந்திரியம். மனதைவிடச் சிறந்தது புத்தி. அதைவிடச் சிறந்தது ஆத்மா. காமம் கடவுளைப் பற்றிய எழுச்சியாக மாற வேண்டும். கோபம் மாயையைக் கொல்லும் சக்தியாக வேண்டும்.

பெறலரிய தாமிந்தப் பெட்புடலம் சாயுமுனம்
விறலாளன் ஆடல் விளைவறிவார் வித்தகரே

முடிவாகக் கூறுமிடத்து குணநாசம் என்பது வாஸ்தவத்தில் குண மாறுபாடேயாகும். ஒன்றை அறவே ஒழிக்க முடியாது. ஆனால் மேலான மாற்றத்தைத் தரலாம். பிரகிருதியின் சுபாவத்தை நமது லட்சியத்திற்கேற்றபடி மாற்றிக்கொள்ள முடியும். இத்தகைய முயற்சியே யோகம் ஆகும்.

விஸ்வாமித்திரருக்குக் 'கோபம்' என்ற குணதோஷம் மிகுதியாக இருந்தது. ஆனால் அந்தக் கோபமே ஞான தாகமாக உருமாறி அவரை ராஜரிஷி யாக்கியது. குணத்தை ஆத்ம லாபத்திற்காக மாற்ற முடியுமானால் அதுவே குணநாசம் ஆகும்.

(தொடரும்)

அநுபூதி விளக்கம்.

மலையும் மார்பும்

(கி. வா. ஜ.)

கச்சியப்ப சிவாசாரியார் இயற்றி வந்த கந்த புராணம் வடமொழி கந்த புராணத்தைத் தழுவி அமைந்த நூல். சில இடங்களில் சிவாசாரியார் தம் அன்பினால் சில சில வேறுபாடுகளைச் செய்திருக்கின்றார்.

தமிழ் நாட்டில் முருக வழிபாடு தொன்று தொட்டு இருந்து வருகிறது. அவனைப் பற்றிய கதைகளும் பல வகையாக வழங்கி வருகின்றன. சங்க நூல்களில் வரும் சில வரலாறுகளுக்கு வடமொழிக் கந்த புராணத்திலோ ஆதாரம் காணப்படுவதில்லை.

அருணகிரிநாதப் பெருமான் பாடிய பாடல்களில் கந்தபுராணத்தில் காணப் பெறாத பல செய்திகள் உள்ளன. பழைய மரபைப் பின் பற்றிக் கொண்டவை சில. அவர் தம் அருளநுபவத்தால் உணர்ந்தவை சில.

ஓர்ந்தார் விரைந்தார் உவந்தார் உமைமகனைத்
தேர்ந்தார் நிறைமனத்தில் தெய்வமணம் உள்ளதுவே.

சூரனுக்குத் துணையாக நின்ற கிரவுஞ்ச மலையை முருகன் வேலைவிட்டுப் பொடியாக்கினன் என்ற செய்தி கந்தபுராணத்தில் இருக்கிறது. கிரவுஞ்ச மலையின் குகைக்குள் தேவர்கள் புகுந்து வழி தெரியாமல் மயங்கினர்கள் என்று அது கூறும்.

பழைய நூல்களில் கிரவுஞ்சகிரியைப் பற்றி உள்ள செய்தி ஒன்று கந்த புராணத்தில் காணப் பெறவில்லை. சூரன் கிரவுஞ்ச மலையைக் கவசம் போல் கொண்டு அதனூடே புகுந்து எங்கும் திரிந்தான் என்றும், முருகப் பெருமான் வேலை ஏவிக் கிரவுஞ்ச மலையையும் சூரன் மார்பையும் ஒருங்கே துளைத்தான் என்றும் உள்ள வரலாறே அது.

ஒட்டக் கூத்தர் தாம் இயற்றிய தக்கயாகப் பரணியால் முருகனைப் பாடுகிறார்.

"ஒருதோகை மிசையேறி உழல்சூரும்
மலைமார்பும் உடனூடுறப்
பொருதோகை சுரராச புரமேற
விடுகாளை புகழ்பாடுவாம்" (தக்க, 5)

என்பது ஒரு பாட்டு. இதற்கு உரை செய்ய வந்த பழைய உரையாசிரியர், தனக்குப் பகைவனை சூரபன்மாவுக்கு மறைவாய் ஓடிவாலான மலையினுடைய மார்பும் சூரபன் மாத்தாலும் ஒக்க ஒரே காலத்திலே ஊடுருவும்படி வேலேறுபடப் பொருதருளி என்று எழுதுகிறார். பின்னும்,

"எழுமலை கொல்லும் அசனி" (தக்க. 170)

என்ற இடத்தில், 'கருவிக்கும் மலைகளைக் கொல்லும் உறு மேற்றேறுடப்பான்' என்று உரையும், 'கருவம், சூரபன்மாவைக் காக்கின்றோம் என்பது' என்று விசேட வுரையும் எழுதுகிறார்.

இவற்றால் கிரவுஞ்சம் சூரனுக்கு அரணாகிப் பறந்த தென்றும், அதையும் சூரபன்மனையும் ஒரே காலத்தில் வேலால் துளைத்தான் முருகன் என்பதும் பெறப்படும்.

வான்முதலாம் ஐம்பூதம் வாழ்கின்ற கூடதனில்
வான்முதலாம் மெய்க்குயில்தான் வாய்திறப்ப தோர்வேமோ

"....... ....கார்வத்
துறங்குகிலைப் பொருப்புஞ்சூர் உரப்பொருப்பும்
பிளப்ப.............. ....
வேலெடுத்த குமரவேள்"

என்ற திருவிளையாடற் புராணப்பாடலினும் இக்கருத்தைக் காணலாம்.

அருணகிரியார் கந்தர் அநுபூதியில் இந்த வரலாற்றைக் குறிக்கின்றார்.

கிளைபட் டெழுசூர் உரமும் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே!

சுற்றத்தார் யாவரும் அழிய இறுதியில் சூரனது மார்பும் அவனுக்கு அரசனாக இருந்த கிரவுஞ்ச மலையும் தொளைபட்டு அழியும்படியாக விட்ட வேலையுடைய பெருமானே!' என்பது இதன் பொருள்.

தம்பியர், புதல்வர், பிறசுற்றத்தார் ஆகிய கிளைகள் சூரனுக்குப் பல உண்டு. அந்தக் கிளைகளை முதலில் முருகன் களைந்தான்: படச் செய்தான். இறுதியில் சூரனைக் கொன்றான். வேற்படையினாலே மலையைப் பொடியாக்கிச் சூரன் மார்பைத் துளைத்தான்.

"வளையை அணிந்த மாதர், மக்கள் என்னும் கிளைகளால் துன்புறும் எனக்கு, அந்தத் துன்பத்தைப் போக்கி அருளவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள வந்தவர், அதற்கு ஏற்ற தகுதியுடையவன் முருகன் என்பதைப் பிற்பாதியில் சொல்கிறார். கிளைகள் படப் பின்பு மலையும் படப் பின்பு சூரன்பட வேலை எறிந்தவன் முருகன். அவனே தாரேஷணை, புத்திரேஷணை, தனேஷணை ஆகியவற்றை மாற்றி ஆசையை அறச் செய்து அகங்காரத்தைப் போக்குவான் என்பதை அறிந்து கூறினர்.

வளைபட் டகைம்மா தொடுமக் களெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூர் உரமும் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே!

[கிளைபட்டு-சுற்றத்தார் பட. உரம்-மார்பு. தொடு-விட்ட.]

யாவும் உணர்ந்துணர்த்தும் யாமளையாள் கேள்வனெனி
பாவும் உளக்கமலம் பயிலுமது பாரீரோ

தேவிதாசர்கள் 20.

பக்த சாமளர்

(ரசபதி)

மங்களமானது மகத நாடு. அதன் ஒரு பகுதி கௌரிபுரம். அப்பதியில் வாழ்ந்தவர் அளவிலர். சொன்ன அவர்களுள் ஒருவர் சோமர். அவர், அம்பிகையைப் பல காலம் ஆராதித்தவர், ஸ்யாமளா, ஸ்யாமளா, அம்பா! இப்படி ஓயாது அவர் வாய் உருவேற்றும்.

அத்தேவியின் அருளால், சோமர்க்குப் பிறந்தது ஒரு பிள்ளை. சீராடல் நிகழ்ந்தது. ஜாதக கன்மம் முடிந்தது. வழிபடு தேவியின் பெயரையே மைந்தர்க்கு வைத்தார். பொழுதொரு வண்ணமாக வளர்ந்த புதல்வர்க்கு, நலம் சிறந்த உபநயனம் நடந்தது. தந்தையே வித்யா குருவாக விளங்கினர். கற்பவற்றை மட்டும், மைந்தர் ஐயம் அறக் கற்றார்

கல்வி ஒரு கருவி. வகையாக, அது ஒரு அளவிற்குத்தான் வழி காட்டும். அதன்மேல், திருவருள்தான் கைகொடுக்க வேண்டும். இந்த எண்ணம் மைந்தர் உள்ளத்தில் எழுந்தது. உடனே தந்தையிடம் வந்தார். அடியில் விழுந்தார். வணங்கி எழுந்தார்.

அப்பா! அகில உலகும் அமலையின் உருவம். எவருடைய வாழ்க்கையும், அவளால் வந்த ஆக்கம். தாங்கள் கற்பித்த கலைகள், அருமையாக அவைகளை அறிவிக்கின்றன. வாழ்விக்கும் சாமளையை, வழிபட விரும்புகிறது மனம். அதற்கு உரிய முறையை, அடியேனுக்கு உபதேசியுங்கள் என்றார்.

மைந்தர் மனநிலை யறிந்த தந்தை மகிழ்ந்தார். காலம் கருதி இருந்தார். சிறந்த ஒரு நாளன்று, செய்யும் விதிமுறை செய்தார். அதன்பின், விமல தேவியின் வித்தான மனுவை விளக்கினர்.

அன்று முதல் மைந்தர், அதை உருவேற்றி யிருந்தார், சபாஷ் என்றார் தந்தை. பெற்றவள் வயிறு பெரிது குளிர்ந்தது. நாள்கள் சில இடையில் நடந்தன.

சாமளா! அறுபத்து நான்கு சத்தி பீடங்கள், இந்த உலகில் இருக்கின்றன. சேவித்துத் திரும்புகிறோம். சகல வடிவி, உன்னைக் காப்பள். வருகிறோம் என்று, ஒரு நாள், தாயும் தந்தையும், மைந்தரைப் பிரிந்து சென்றனர்.

*   *   *

வேட்கின்ற செய்திபல விட்டிட்டு, தெய்வகதை
கேட்கும் செவியிலிறை கேட்பதனைக் கேளீரோ

தந்தை தாயரால் தனியே விடப்பெற்ற சாமளர், வரத தேவியை வழிபட்டு, தம் மாளிகையில், பகல் பொழுதைப் பய னுக்கினர்! நள்ளிரவில், புனித தேவி கோயிலுள் புகுந்தார். மூலத்தானத்தில் நுழைந்தார். ஒரு புறத்தில் அமர்ந்தார். அங்கு மூன்று மணி நேரம், உயர்ந்த பிஜாட்சரததை உருவேற்றினர். அதன்பின் புறப்பட்டார். வீடு வந்து சேர்ந்தார். ஒவ்வொரு நாளும் இதே நிலைதான். உருண்டு மூன்று மாதங்கள் இப்படியே ஓடின.

* * *

அரசர் படை வீரருள் ஒருவன் அதிகன். சென்ற போர்க் களந்தோறும், வெற்றி யெய்தி விருது பெற்றவன். கம்பீரமான தோற்றம்; முறுக்கிவிட்ட மீசை; இச்சூழ்நிலை, அவனைக் கண்ட வர்க்கு அச்சம் அளித்தது.

இருந்த பழைய சேனை யதிபர், காலம் வந்து இறந்தார். அந்த ஸ்தானத்தை நிரப்ப, வேறொருவர் வேண்டும். அரச மன்றம், அதைக் குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்தது.

அதிகனுக்கு அப்பதவியில் ஆசை. தன் தகுதிகளைத் தொகுத்து, அப்பதவியைத் தனக்கு அளிக்கவேண்டும் என்ற விநய விண்ணப்பம் ஒன்றை, வேந்தர்க்கு அனுப்பினன். ஆரணி யெனும் தன் மனைவி சொன்ன ஆலோசனையின்படி, அவளுடன் ஒருநாள், அதிகன் அம்பிகை ஆலயத்திற்கு வநதான்.

சொநதச் செலவில், அபிஷேக அலங்காரங்கள் செய்து, சநிபதிகளை, அருளார்ந்த தேவியை ஆராதிததனர்.

தாயே! மனோன்மணி! தயவு செய்! பதவி வந்தால், இரத்ந பதக்கம் சாத்துகிறோம் என்று, இருவம் எதநிப் போற்றி இறைஞ்சினர்.

என்ன ஆச்சர்யம்! பிரார்த்தித்த மறுநாளே, வேந்தர் அழைப்பு வந்தது. பழைய சேனாபதிக்குப் பதிலாக, நிருபர் சபை அதிகனை நியமித்தது. அதற்கு ஆன சடங்குகள் நடந்தன.

அன்று மாலை, பதவிக்குரிய விருதுகளுடன், அதிகன் தன் மாளிகையுள் நுழைந்தான். கணவனது வளர்ச்சியைக் கண்டு, ஆரணி இதயம் களித்தது.

இது தேவி செய்த பேரருள் என்றாள். ஆம். ஆம் என்றான் அதிகன். பிரார்த்தித்துக் கொண்டபடி, பத்துப் பவுனில் ஒரு இரத்தின பதக்கத்தை, பத்தே நாளில், அமைத்தனர்.

பெற்றிருக்கும் மூக்கில் பெருமான் உயிர்க்கவுயிர்த்(து)
உற்றிருக்குஞ் செய்தி, உணர்ந்துமகிழ் கொள்ளீரோ

அன்று ஸ்யாமளா தேவிக்கு, சிறப்பாக ஆராதனைகள் செய்தனர். இரத்தினங்கள் பதித்த தங்கப் பதக்கத்தை, தற்பரி திருமார்பில் தரித்தனர். அர்ச்சகர்க்குப் ப்ரீதி செய்தனர். தம் திருமாளிகைக்குத் திரும்பினர்.

அன்று இரவு, இருவரும் அம்பிகை அருளை நினைந்தனர். பதக்கப் பளபளப்பைப் பாராட்டினர்.

அது, புனித ஸ்யாமளைக்கு எவ்வளவு பொருத்தமா யிருந்தது! அதை யல்லவா பாராட்ட வேண்டும் என்றாள் ஆரணி. பேசியதையே இப்படித் திருப்பித் திருப்பிப் பேசினர். இரவு மணி ஒன்று.

அதன் பிறகு படுத்தனர். அதிகன் கண்கள், உறங்க ஆரம்பித்தன.

விலை யுயர்ந்த வைரப் பதக்கம் அல்லவா, இறைவி திருமார்பில் இருக்கிறது. அதை எவரேனும் அபகரித்துக் கொள்வரோ? இதயம் எப்படி எண்ணியது.

என்ன? தூங்குகிறீர்களா? எனக்கு என்னமோ மனம் ஒரு மாதிரியாக இருக்கிறது. எழுந்திருங்கள்! இறைவியின் மார்பில் பதக்கம் இருக்கிறதா? கழற்றி வைத்திருக்கிறார்களா? தெரியவில்லையே; எதற்கும் கோயிலுக்குச் சென்று, பார்த்துவிட்டுத் திரும்பிவிடுங்கள் என்று, கொஞ்சி ஆரணி கெஞ்சினள்.

இதைக் கேட்டு, பாதித் தூக்கமும் பறந்தது. அதிகன் மனமும் அதிர்ந்தது.

எழுந்தான். விரைந்து நடந்தான். புனித கோயிலுள் புகுந்தான். தேவி சந்நிதி திறந்து கிடந்தது தூங்கா விளக்கு, நானும் இருக்கிறேன் என்று அறிவிப்பது போல், மினுக் மினுக் என்று தூங்கி வழிந்து கொண்டிருக்கிறது.

* * *

ஸ்ரீ ஸ்யாமளா தேவியின் அருகில், சாந்த முகமாகி அமர்ந்து இருக்கிறார் சாமளர். கருணையையே கண்டறியாத அதிகன், அவரைக் கண்டான். திடுக்கிட்டது அவன் மனம்.

என்ன தைரியம் இவனுக்கு? கள்ளன் இவன், பதக்கத்தைக் களவாட வந்தவன். நம்மைக் கண்டு, ஜெபம் செய்பவன்போல் நடிக்கிறான். பக்தியால் உருவேற்றுபவனுக்கு, பாதி ராத்திரிதான் நேரமோ? பகுத்தறிவு, இப்படி எல்லாம் படபடக்கிறது.

விரைந்தான். பேறுன பக்தரைப் பிடித்தான் தாடையில் ஓங்கி யடித்தான். ஐயோ! என்று அலறினர் சாமளா. பிஜாட்சர

காணும் பொருளனைத்தும் கந்தன் திருவுருவாத்
தோண விழியிலவன் தோய்ந்திருப்ப தோரீரோ

ஜெபம் செய்து கொண்டிருந்த அவர்க்கு, இச்சம்பவம் இடி இடித்ததுபோல இருந்தது.

உள்ளறிந்த கள்ளனடா! நீ உளவறிந்த திருடன்! விடுவதில்லை உன்னை என்று, வாயில் வந்தபடி வைதான். பரபர என்று அவரை இழுத்துச் சென்றான். தன் மாளிகையை அணுகினன். கணவனுடைய ரௌத்திராகாரத்தை, ஆரணி கண்டாள். எதையும் கேட்க அஞ்சினள்.

தன் வீட்டின் பின்புறத்தில் இருந்த தனியறையில், அதிகன் சாமளரைத தள்ளினன். அவர் கைக்கும் காலிற்கும் விலங் இட்டான்.

இரு இரு! உன்னை நாளை விசாரித்துக் கொள்கிறேன் என்று உறுத்தான். கதவைச் சாத்தினன்; பூட்டும் இட்டான்.

பள்ளி யறைக்குச் சென்றான். மனைவியைப் பார்த்தான்.

இப்போது எதையும் கேட்காதே; ஆரணி! எல்லாம் நாளை காலை சொல்கிறேன்! என்று, படபடத்துச் சொல்லிவிட்டுப் படுத்தான்.

கோபம் மூளையைக் கொதிப்பேற்றி யிருந்தது. கொஞ்சத்தில் நித்திரை வரவில்லை. மூடிய கண்ணைத் திறந்திலன். அரை மணி நேரம் ஆனபின், அயர்வு பிறந்தது. நித்திரையில் ஆழ்ந்தான்.

உத்தம சாமளர்க்கு, ஒன்றுமே தோன்றவில்லை. அடித்தவன் யார்? ஏன் அப்படி யிழுத்தான்? விலங்கிடும் அளவிற்கு, நான் விளைத்த குற்றம் யாது? கள்ளன், திருடன், ஆம், என்னென்னவோ சொன்னானே! ஒன்றுமே விளங்கவில்லையே!

ஒருவேளை, பீஜாட்சர ஓசையில் பிழை பிறந்ததோ? இமய வல்லி செய்த தண்டமோ இது?

சாம்பவி! ஜகத் ரட்சகி! கல்யாணி! காமாட்சி! கருணாகரீ! ஸ்ரீ ஸ்யாமளா தேவி! பேதையேன் செய்த பிழையுளதேல், பொறுத்திடுக தாயே! கோமளாம்பிகே! கொண்ட கோபம் தணி; சிவனார் இடதனில் இருப்பவளே! உன் சீற்றம் தணி; சினம் தணிந்து சிறியேனை ஆண்டு கொள! ஆண்டு கொள்! ஏழையேன் வேண்டுகோள் இது என்று, விண்ணப்பித்து சாமளர் விம்மினார்.

* * *

விடியற்காலம் நான்கு மணி. கதவு திறந்தது. எதிர் நின்றான் அதிகன். சாமளர்க்கு, தான் இட்ட கால்விலங்கு கைவிலங்கைக் கழற்றினன்.

சிந்தனைக்(கு) எட்டாத தெய்வக் குமரேசன்
தந்ததொகு சிந்தனையில் தானிருப்ப தெண்ணேமோ

சாமளா! ஓடு! வீட்டிற்குப் போய்விடு என்று வெடு வெடுத்தான்.

ஐயா! நான் என்ன பிழை செய்தேன்?

பதில் சொல்ல இதுவல்ல நேரம்! உன்னைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்! முன்னே இந்த இடம் விட்டுப் போ!

நல்லது ஐயா! ஸ்பாமளா என் தாய்; அவள் என்ன செய்திருளோ செய்யட்டும்! அதைத் தடுக்கவோ, கேள்வி விடுக்கவோ, எனக்கு ஏது உரிமை? வருகிறேன் என்று, புனித சாமளா புறப்பட்டார்.

*   *   *

ஆரணி, காலை ஐந்து மணிக்கே கண் விழித்தாள். விலங்கிடப் பட்டவன் யார்? அறிய வேண்டும என்று விரைந்தாள.

இரும்புக் கம்பிகளையுடைய சிறைக் கதவு, பூட்டப்பட்டிருந்தது. உள்ளே ஆள் இல்லை.

என்ன வியப்பு! யார் அவன்? ஏன் அவனைச் சிறையில் அடைத்தார்? நான விழி மூடிய பிறகு, அவனை விடுவித்திருக்க வேண்டும். ஆம். அப்படித்தான் இருக்கும் என்று எண்ணினள். பொழுது விடிநதது.

*   *   *

ஆ! ஹா! ஐயோ! என்ன இது? யார் அங்கே? வீறிட்டது குரல். அதிர்ந்தது படுக்கை யறை.

பயந்தனர் பணியாட்கள். ஓடி வந்தனர். பள்ளி யறையுள் துணிந்து நுழைந்தனர்.

அதிகனுடைய கையில் விலங்கு; காலிலும் தளை. மல்லாந்து கிடந்து, ம்...ம்...ம்...ம்...ம் என்று முனகி, கட்டிலில் அவன், அப்படியும் இப்படியும் புரள்வதைக் கண்டனர். திடுக்கிட்டது மனம்.

எஜமான்! என்ன இது? இந்த அநியாயம் செய்தவர் யார்? எவ்வளவு பேர் நாங்கள் இருக்கிறோம். மாயப்பொடி தூவி எவனோ ஒருவன் எங்களை மயக்கி யிருக்கிறனே! உங்கட்கோ விலங்கு? இட்டவனுக்கு எவ்வளவு நெஞ்சு துணிச்சல்?

நீராடிக் கொண்டிருந்த ஆரணிக்கு, அந்தப்புர ஆரவாரம், விரைந்து செவியில் விழுந்தது.

என்னடா அது? என்று, அங்கிருந்தே வினவினள்.

புன்மை புறமொதுக்கிப் புண்ணியமெய் தந்தகுகன்
நன்மை யருளதனை நாவாழ்த்து கின்றதரோ

அம்மா! ஐயோ! இங்கே வந்து எஜமானரைப் பாரும் என்று, பேய்போல் அலறினள் ஒரு பணிப்பெண்.

ஆரணி, ஈரச் சேலையுடன் ஓடி வந்தாள், கணவனைக் கண்டாள், பணியாட்களில் சிலர், விலங்கைக் கழற்ற முடியாமல், வேதனைப் படுவதை யறிந்தாள். கோவென்று கதறினள் அக் கோதை.

என்ன கூத்து இது? உங்கட்கா விலங்கு? எந்தப் பாவி இதை செய்தான்? ஆலயத்திற்குத் தங்களை அனுப்பியதி லிருந்து, ஒரே அதிர்ச்சி மயமாய் விட்டதே! ஆ-ஆ-ஆ என்று தேம்பி யழுதாள்

கொல்லர்கள் வந்தனர். கருவிகளைக் கொண்டு எவ்வளவு முயன்றும், காழ்த்த விலங்கு கழலவே யில்லை. ரம்பத்தாலும் அறுபடவில்லை. உடைக்க முயன்றனர். கணீர், கணீர் சப்தம்; அவ்வளவுதான். கை நொந்ததுதான் கண்ட பலன்,

என்ன அதிசயம்! பார்த்த பணியாட்கள் பதறினா. அதிரக் கதறினள் ஆரணி

கதறாதே ஆரணி! இவைகள, நம் மாளிகையில் இருந்த விலங்குகள. இரவு என் கையால், கள்ளனுக்கு இடப் பெற்றவை. என் கைக்கு இவை மாறியது எப்படி? அதுதான் தெரியவில்லை. வீட்டின் புற அறையில், சிறை யிருப்பவனை, வெளிப்படுத்திக் கொண்டு வா! விவரம் அவன் வந்தால்தான் விளங்கும் என்றான் அதிகன்.

ஐயோ! என்ன கூத்து இது? அந்த அறை பூட்டப்பட்டுத்தான் இருக்கிறது. உள்ளே ஆள இல்லை. நீங்களே விடுதலை செய்திருப் பீர்கள என்றல்லவா நினைத்தேன்! இந்திர ஜாலம்போல் இருக் கிறதே! ஒரு வேளை மந்திரவாதியா வந்தவன்? என்று அதிகம் அலறினள மனைவி. அதிகன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

போட்ட பூட்டு போட்டபடியே யிருக்க, மாபெருங் கள்ளன் மறைந்திருக்கிறான். அவன் கை விலங்கு, கால் விலங்கு, என் கை கால்களில ஏறி யிருக்கிறது! இவைகளை உடைக்கவும் முடியவில்லை; என்ன அதிசயம்! அழுது தேம்பினன் அதிகன்.

மகத சேனாதிபதிக்கு யாரோ விலங்கு மாட்டினர் என்று, படர்ந்து செய்தி எங்கும் பரவியது. அவனைப் பார்க்க, மக்கள் அளவின்றித் திரண்டனர். அவர்களை விரட்டி யடித்தது இராணுவம்.

நீர்க்குமிழி போன்றவுடல் நீதனரு ளாலுலகில்
வார்க்கும் பல் ஆண்டாகி வாழ்வதனை ஓர்வேமோ

பரம துஷ்டன். பலரைப் பகைத்தான். அதிகாரத் திமிரால், மட்டு மரியாதையை மறந்தான். வாய் வந்த வார்த்தைகளால் வைதான். எதிர்த்தவர் கையில, அழியும் விலங்கைப் பூட்டினன்; அந்தப் பாவத்தால், அழியா விலங்கை, யாரோ இவன் கையில் மாட்டினர். கூடிக் கூடி இப்படிப் பேசுகிறார்கள் குடிகள்.

* * *

அன்று விடியற்காலம் நான்கு மணிக்கே, மகத நாட்டு அரசர், அந்தப்புரத்தில் கண் விழித்தார். எழுந்ததும், நாற்புறமும் மருண்டு நோக்கினர். அவருடைய பார்வை, அரசிக்கு அச்சம் அளித்தது.

என்ன இது என்று, பார்த்திபர் கரத்தைப் பற்றினள்; வியர்த்துக் கொட்டி யிருந்தது வேந்தர் உடல்.

பிரபு! ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்?

தேவி! பங்கமாயது நம் செங்கோல்! பக்தர் ஒருவர்க்கு, ஏதோ பாதகம் செய்திருக்கிறன் ஒரு அதிகாரி. ஆலய வாயிலில், அம்பிகை திருமேனி அதிரக் கண்டேன். என்ன என்னவோ தெரிவித்தாள் தேவி. மாபெரும் அந்த அறிவிப்புகளை, ஐயோ! பிறந்த அதிர்ச்சியில் மறந்து விட்டேனே!

"பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்,
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாய்ந்திடும்
சத்தியம் ஈது; சதாநந்தி ஆணையே"

என்று, பரமேஸ்வரி கோயிலில், ஒரு அடியார் பாடக் கேட்டேன், அந்தப் பாட்டின் ஒலி, சுறீல் சுறீல் என்று, என் இதயம் புகுந்து சுடுகிறது! அப்பப்பா! என்ன பயங்கரமான கனவு!

கோமகன் சொன்னதைக் கேட்டு, என்ன விபரீதம் நேர இருக்கிறதோ என்று, குடர் குழம்பினள் கோமகள.

வேந்தர் எழுந்தார். காலைக் கடனை முடித்தார். நீராடி அனுட்டித்தார். மெய்க் காவலனைக் கூவினர்.

ஓடு! அமைச்சரை அழைத்து வரச் சொல்! சேனை அதிபரை யும் கொண்டு வரச் சொல்! உம், சீக்கிரம்.

பிரபு! அமைச்சர் அந்தரங்க அறைக்கு வந்திருக்கிறர்...... சொல்லி முடிப்பதற்குள், வேந்தர் அந்த இடம் நோக்கி விரைந்தார்.

அரசர் வருகை கண்டு எழுந்த அமைச்சர், வருக பிரபு! என்று வணங்கினர்.

எல்லாம் உதவும் இயல்துணையாய்க், காலத்தில்
எல்லாம் தருவானை எண்ணத்தில் வைப்போமே

அமைச்சரே! ஏன், உம் உடல் இப்படி ஆடுகிறது?

பிரபு! சேனாதிபதி விலங்கிடப் பட்டார்.

அதிர்ந்தது அரசர் மனம். என்ன அதிசயம்? யார் அது செய்தவர்? என்று கர்ஜித்தார்.

பிரபு! ஊரே கொந்தளிக்கிறது. பலர் பலவாறு பேசுகிறார்கள். நேரே சென்றேன். ஸ்ரீ ஸ்யாமளா தேவி கோயிலில் இருந்த ஒருவரை, கள்ளனென ஐயுற்று விலங்கிட்டு, தனிச் சிறையில் அவரைத் தள்ளி யிருக்கிறார். பூட்டிய கதவு பூட்டியபடியே யிருக்க, சிறையில் இருந்தவர் மறைந்து விட்டார்.

ஆஹா! அப்படியா செய்தி!

அது மட்டுமா பிரபு! அவர்க்கு இட்ட விலங்கு, இவர்க்கு இடப் பட்டிருக்கிறது. கொல்லர் முயன்றனர். விலங்கு கைவிட்டு விலகுவதாக இல்லை. சேனாபதியே தெரிவித்த செய்தி யிது!

நரபதி இதயம் நடுங்கியது. அதை வெளியில் காட்டாமல், சரி, வாரும்; போய்ப் பார்த்து வருவோம் என்றார். ஏறிய குதிரைகளில் இருவரும் விரைந்தனர்.

* * *

அரசரைக் கண்ட அதிகன், விம்மி யழுது சிறிது விளம்பினான். விம்மலால் விளம்ப முடியாத பகுதிகளை, அழுதபடியே அறிவித்தாள் ஆரணி.

சரி சரி. இன்று சகித்துக் கொள்ளுங்கள். ஆவன குறித்து ஆலோசிக்கிறேன்; நாளை சந்திக்கிறேன் என்று, ஆறுதல் கூறினர் அரசர்.

* * *

அன்று ஊரெங்கும் இதே பேச்சு. மாலையில் சூரியன் மலையில் விழுந்தான். பரவி யிருள் எங்கும் படர்ந்தது. உலகம் முழுதும் உறங்குகிறது. பயங்கர இரவு. மணி பன்னிரண்டு.

புனித தம் மாளிகையி லிருந்து, சாமளர் புறப்பட்டார். ஸ்யாமளை கோயிலுள் புகுந்தார். அத்தேவி அருகில் அமர்ந்தார்.

அம்பா! ஆக்குவாய், காப்பாய், இம் மாபெரும் உலகம், உனது அருள் முத்திரையொடு, சிறக்க நின் ஆணையைச் செயல்படுத்துகின்றது. அம்பிகே! அனைத்தும் உன் அருளாடல் என்பதை அறிகிறேன்.

வேறு ஒருவன் மூலம் விலங்கிட்டாய்! அருஞ் சிறையில் அடைத்தாய்! அவன் மூலமே விடுதலையும் அளித்தாய்!

ஆடும் பதுமைகளை ஆட்டுவிப்பான் போலமலன்
நீடுமுயிர்க் கூத்து நிகழ்த்துவிப்ப தோர்வேமோ

ஸ்ரீ ஷ்யாமளா தேவி! மறம் கூட்டி அறம் காட்டும் உனது அருள், வாழி தாயே! வாழி தேவி என்று வாழ்த்தினர்.

வர வர மவுனம் வளர்ந்தது. இதயம் இறைவியை நினைந்தது. உதடுகள் மந்திரத்தை உருவேற்றின. பசுமை ஒளி, உணர்விற் படர்ந்தது, தன் வசம் இழந்தார்; பரவசம் ஆயினர் பக்த சிகாமணி.

* * *

இரவு மணி ஒன்று. அரவம் இன்றி ஒரு உருவம், அடிமேல் அடி வைத்து நடந்தது. இனிய கர்ப்பக் கிருகத்தை எட்டிப் பார்த்தது. கனிந்த சாமளரைக் கண்டது. தேள கொட்டியதுபோல் பதைத்த அவ்வுருவம், பேரச்சம் கொண்டு பின்வாங்கி, ஒரு புறமாக ஒதுங்கி ஒளிந்தது.

இரவு மணி இரண்டு. சாமளர் எழுந்தார். வீழ்ந்து வணங்கினர். வாழ்க தேவி என்று வாழ்த்தினர். அங்கிருந்து வெளிப்பட்டார்.

விடுதலை! விடுதலை என்று, மெல்ல ஒலித்தது ஒரு குரல்.

யார் அது? விடுதலையா? யார்க்கு? எனக்கா விடுதலை? வாத தேவி! இது உனது ஆணையாயின், வாழ்ந்தேன்! என்று எழும்பிக் குதித்தார் சாமளர்.

ஏழைக்கு விடுதலை! உம்மால் ஒருவர்க்கு விடுதலை!! இப்போது, சிறிது கனக்க இருந்தது அக்குரல்.

என்னால் விடுதலையா? ஒன்றும் விளங்கவில்லையே! பேசுவது யார்?

பேசியவள் தேவி; அது கேட்டுப் பேசுகிறவன் தங்கள் தாஸன் என்று, எதிர் வந்தது அவ்வுருவம்.

என்ன அதிசயம்! மகாராஜா! தாங்களா? என் கண்களே என்னை ஏமாற்றுகின்றனவா? என்ன செய்ய வேண்டும் இந்த ஏழை?

ஸ்வாமி! தேவி தாஸர் பெருமை தெரியாத சேனாபதி, அம்மன் நகைகளைத் தாங்கள் அபகரிக்க வந்ததாக ஐயுற்று, வீணாகத் தங்கட்கு விலங்கிட்டான். அவனுடைய மாபெரும் பிழையை, தாங்கள் மன்னிக்க வேண்டும்!

ஓஹோ! அப்படியா செய்தி! இது மெய்யானால், தவறை உணர்ந்தார்; பிறகு அவரே விலங்கைத் தறித்து விட்டாரே! இன்னும் அவர்மேல் என்ன பிழை?

வல்லான் திருப்புகழை வாய்மணக்கப் பாடுகின்ற
நல்லார் அடிப்பொடியை நம்முடிமேல் கொள்வோமோ

அவரா விலங்கை அகற்றினர்; ஸ்வாமி! அம்பிகை அல்லவா விலங்கி லிருந்து தங்களை விடுவித்தவள்!

அரசே! என்ன அதிசயம்! உண்மையாகவா சொல்கிறீர்கள்?

ஸ்வாமி! ஸ்வாமி! என்ன புண்ணியம் செய்தேனோ! எவர் ஆசி செய்தனரோ? வரத சிவை என் கனவில் வந்தாள்; அருளொடு இவைகளை அறிவித்தாள். தங்கள் விலங்கைக் கழற்றினள்; அதை அப்படியே அவர் காலில் கையில் மாட்டினள். கழற்ற முடியாத அவளிட்ட கை விலங்கு கால் விலங்கை, கருணை கொண்டு தாங்கள் தான் கழற்றிவிட வேண்டும்!

ஸ்ரீ ஸ்யாமளா தேவி! என்று அலறியது இதயம். அம்பா! என்னையும் ஒரு பொருளாக்கி, இங்கு எழுந்தருளல் செய்தாயா! அடியேன் அறியாதபடி, அதிகன் உருவில் வந்தாயா! காவலர் கண்ட நின் திருவுருவை, என்றும் யான் கண்டிலனே, பரமேஸ்வரி என்று, சாம்பிப் பொருமினர் சாமளர்.

ஸ்வாமி! தங்களைப் போன்றவர்களால்தான், நலம் சிறந்து வாழ்கிறது இந்த நாடு!

கருணை காட்டும்! சேனைபதி விலங்கைக் கழற்றி யருளும் என்று, விநயமொடு மேலும் வேண்டினர் வேந்தர் பிரான்.

சாமளர், அரசருடன் சென்றார். அவரைக் கண்டு அச்சம் அடைந்த அதிகன், உருண்டு புரண்டான். கண்ணீரால், அவர் அடிகளை நனைத்துக் கதறினன்.

மாங்கல்ய பிட்சை கேட்கிறேன்! எங்களை மன்னியுங்கள் ஸ்வாமி என்று, அலறி நின்றாள் ஆரணி.

தேவி பீஜாட்சரத்தைச் சிந்தித்து, கனம் தங்கிய அவ் விலங்கின் மேல், சாமளர் கை வைத்தார்.

ஆம். அவ்வளவில், விலங்குகள், கணீரென்று உடைந்து நிலத்தில் உருண்டன.

காவலரும் பிறரும், இதைக் கண்டனர், எவர்க்கும் மெய் சிலிர்த்தது.

பக்தவத்சலீ! பராபரீ! உன் பாத சேகரரை, அறியக் காட்டிய உனது அருட்கு எல்லையுண்டோ அம்பா! அம்பா என்று பாடிக் குதித்து எவரும் பஜனை செய்தனர். அவர்கள் நடுவில் இருந்த சாமளர், தேவ தேவியை, தொழுது பாடித் துதி செய்தார்.

*　　　*　　　*

கெடுநெறியிற் சென்று சென்று கேடடையாதன்பர்
தொடுநெறியே சென்றருளில் தோய்ந்தின்பம் எய்தேமோ

அதன் பின் அரசர், அம்பிகை வழிபாட்டிற்குப் பயனுள உதவி பல செய்தார். இதுவும் அவள் அருள் என்று அறிந்த சாமளர், வாம தேவி வழிபாட்டை மேலும் மேலும் வளர்த்தார். அரசர், அரசி, அதிகன், ஆரணி முதலானோருடன், பாரில் உள்ள பலர், சாமளர் மூலம் தேவி தாஸர்கள ஆயினர்.

* * *

ஒரு நாள் பிறவிக் குருடா யிருந்த பிள்ளையுடன், தந்தையும் தாயும் என்று இருவர் வந்தனர். அருமைச் சேயை, சாமளர் அடியிற் கிடத்தினர்.

ஸ்வாமி! வேண்டாம் என்றேன் அடியேன்; பிள்ளை வேண்டு மென்று, தேவியைப் பிரார்த்தித்தாள் இப்பேதை. பிறந்தது, இவள் எண்ணம்போல் ஒரு பிள்ளை. பிறந்த ஒரு வருடத்தில், இவன் தன் கண் பார்வை யிழந்தான். வேதனையை விலைக்கு வாங்கியதுபோல் இருக்கிறது; இன்ப வாழ்க்கையில், இப்படியும் ஒரு துன்பமா? என்று, குழந்தையின் தநதை குமுறினர்.

ஆநந்தரே! வேண்டாம் என்பது விபரீதம்; வேண்டும் என்ப தும் வேதனைதான். இந்த இரண்டும் இல்லாதவர் மேலோர். வருந்தாதீர்கள்! வாருங்கள் என்று, இறைவி கோயிலுக்குச் சென்றார். மூவரும் தொடர்ந்து கோயிலை யடைந்தனர்.

மதுரைத் தேவி! காமாட்சி! காசியில் ஆட்சி கண்டவளே! இப்படியும் ஒரு திருவிளையாடலோ தாயே! பாலன் கண் திறக்கப் பண் என்று, பார்வதி தேவிமேல், பத்துப் பாக்களைப் பாடினர் சாமளர்.

என்ன அதிசயம்! அம்பிகை அருளால், மைந்தன் கண்கள் மலர்ந்தன. தந்தையும் தாயும் மைந்தரும், அளவிலாத மகிழ்ச்சி யடைந்தனர். நடமாடும் கோயில்கள் மூலம், படமாடும் தேவி, பரம தன் அருளைப் பாலிக்கின்றாள் என்று, மாபெரும் உலகம் போற்றி மகிழ்ந்தது.

பல காலம் இப்படியே சேவை செய்திருந்த பக்த சாமளர், எம்பெருமாட்டி திருவடி நிழலில், இன்றும் இன்பம் கண்டு இருக்கின்றார்!

வாழ்க தேவி தாஸர்கள்!

பேரா திருந்த பிறவித் துயரகல
வாராய் எனும்அடியர் வாய்மைவிளி வந்துறுமோ

கண்கண்ட தெய்வம்

(மா. ப. தியாகராஜன் B. A.)

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுடைய எண் குணத்தில் ஒரு குணம் தாமாகவே அறியும் ஆற்றலுடையவன் என்பது ஆகும். "வாலறிவன்" என்றும் வள்ளுவர் கூறுகிறார். எனவே அறிவின் முதிர்ச்சி தெய்வத் தன்மையின் வளர்ச்சியை யுணர்த்துகிறது. விலங்குகளினின்றும் மனிதனை மேம்படுத்துவதும் அறிவின் உயர்வு பேதமேயாகும். சிலந்தியின் கூண்டு நுட்பத்தைக் காணும்போது அதைப் போற்றுகிறோம். குருவியின் தொங்கலாடும் கூண்டின் சிக்கலான பின்னல்களைக் காணும்போது அதன் இயற்கையை வியந்து பாராட்டுகிறோம். நாயினுடைய நன்றி அறிதலை மெச்சுகிறோம். எனவே அறிவின் விளக்கம் எந்த எந்தப் பிராணிகளிடம் காணப்படுகின்றனவோ அவைகளைப் போற்றுகிறோம். சிலர் விலங்குகளை உபயோகப்படுதலின் காரணமாக வழிபடுகின்றார்கள். ஆனால் அறிவு படைத்த மக்களிடத்துப் பேதங் காண்கிறார்கள். கவிகளோ இயற்கையில் சித்தின் விளக்கத்தைக் கண்டார்கள்; பாடினார்கள். அவற்றின் மூலம் இறைவனைப் போற்றினார்கள்.

அப்படிப்பட்ட அறிவு தொழிற்படுவது ஐம்புலன்கள் வழியேயாகும். அவற்றுள் கட்புலன் ஒன்றே ஒரு பொருளின் உருவத்தை உள்ளபடி உணர வல்லது. நான்கு குருடர்கள் யானையை அறியச் சென்றார்கள். ஒருவன் யானையின் காதைத் தடவிப் பார்த்தான். அது முறம்போலிருந்ததை அறிந்து யானை ஒரு பெரிய முறம் போன்ற மிருகம் எனத் தீர்மானித்தான். வயிற்றைத் தடவிப் பார்த்த குருடன் யானை சால்போலுள்ளது எனத் தீர்மானித்தான். தும்பிக்கையைத் தடவிப் பார்த்த குருடன் யானை உலக்கை போலுள்ளது என அறிந்தான். வாலைத் தடவிப் பார்த்த குருடன் யானை ஓர் துடைப்பம் என்றான்.

பெற்றிருக்கும் இவ்வுடலில் பேசாத மோனநிலை
யுற்றிருக்கும் பேறு உவந்துறுநாள் என்றேயோ

கட்புலனின்று கண்ட குருடர்கள் யானையை எவ்வாறு அறிந்தார்களோ அது போன்ற அறிவு தெளிவற்றதாகும். கசடறக் கல்வி அறிவு பயில வேண்டின் கட்புலன் அவசியம் வேண்டும். அப்படிப்பட்ட அறிவுடையவர்களே எல்லாமுடையவர்கள் என்று "அறிவுடையா ரெல்லா முடையர்" என்று திருவள்ளுவர் கூறுகிறுர். "கற்றதனு லாய பயன் என்கொல் வாலறிவன் நற்றுள் தொழா ரெனின்" என்பதனுல், கட்புலனுல் பயிலும் கல்வி அறிவு கடவுளைக் காண வேண்டுமென்பது பெற்றும்.

கட்புலனுல் கடவுளைக் காண்பதெப்படி? கரையற்ற விரிநீர் வியனுலகத்தை மனிதன் காண்கிறுன். கரையின்றி கடல் நிற்கும் அற்புதத்தையும், தாழாது நிற்கும் நாரைகள் கூட்டத்தையும், வானளாவி உயர்ந்து நிற்கும் மலைகளின் கம்பீரத்தையும், அவைகளினின்று பெருகி வரும் நீர்வீழ்ச்சி களின் வேகத்தையும் காண்கிறுன். அவ்வளவு இயக்கங் களுக்கும் காரணமான சக்தி ஒன்று இருக்க வேண்டு மென்ற அறிவைப் பெறுகிறுன். அதே சக்தி நமது அற்புத மான தேகத்தில் தனுகரணங்களை ஆக்கித் தந்துள்ளதென அறிகிறுன். அப்படிப்பட்ட சக்திக்கு நன்றி செலுத்த வேண்டுமென்ற உணர்வும் பெறுகிறுன். அந்நன்றியைக் காட்டவே ஆண்டவனுக்குக் கோயிலமைத்து வைத்தனர்.

இவ்வளவு ஆராய்ச்சிக்கும், அறிவின் மேம்பாட்டிற் கும், கல்வி வளர்ச்சிக்கும் காரணம் கட்புலனன்றே. அதை கலைமகளாகச் சித்தரித்ததும் கட்புலனன்றே? எனவே குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலையில், "விண் கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் விளம்பில் உன் போல், கண்கண்ட தெய்வமுளதோ" என்று பாடியுள்ளார் கள். கலைமகளுக்கென நவராத்திரியில் மூன்று நாள் விழா கொண்டாடுகிறேம். பாரத நாட்டில் மட்டுமே கண்கண்ட தெய்வமாகிய கல்விக்கும் கலைக்கும் வழிபாடு செய்யும் நாகரிகம் உள்ளது.

உள்ளம் இடையிடையே ஓம்பொருளை உன்னுவதைக்
கள்ளமகல் வள்ளயிலன் காண்பதுவும் மெய்யாமே

கட்புலனின்று கண்ட குருடர்கள் யானையை எவ்வாறு அறிந்தார்களோ அது போன்ற அறிவு தெளிவற்றதாகும். ஈசடறக் கல்வி அறிவு பயில வேண்டின் கட்புலன் அவசியம் வேண்டும். அப்படிப்பட்ட அறிவுடையவர்களே எல்லாமுடையவர்கள் என்று "அறிவுடையா ரெல்லா முடையர்" என்று திருவள்ளுவர் கூறுகிருர். "கற்றதனு லாய பயன் என்கொல் வாலறிவன் நற்ருள் தொழா ரெனின்" என்பதனுல், கட்புலனுல் பயிலும் கல்வி அறிவு கடவுளைக் காண வேண்டுமென்பது பெற்ரும்.

கட்புலனுல் கடவுளைக் காண்பதெப்படி? கரையற்ற விரிநீர் வியனுலகத்தை மனிதன் காண்கிருன். கரையின்றி கடல் நிற்கும் அற்புதத்தையும், தாழாது நிற்கும் நாரைகள் கூட்டத்தையும், வானளாவி உயர்ந்து நிற்கும் மலைகளின் கம்பீரத்தையும், அவைகளினின்று பெருகி வரும் நீர்வீழ்ச்சி களின் வேகத்தையும் காண்கிருன். அவ்வளவு இயக்கங் களுக்கும் காரணமான சக்தி ஒன்று இருக்க வேண்டு மென்ற அறிவைப் பெறுகிருன். அதே சக்தி நமது அற்புத மான தேகத்தில் தனுகரணங்களை ஆக்கித் தந்துள்ளதென அறிகிருன். அப்படிப்பட்ட சக்திக்கு நன்றி செலுத்த வேண்டுமென்ற உணர்வும் பெறுகிருன். அந்நன்றியைக் காட்டவே ஆண்டவனுக்குக் கோயிலமைத்து வைத்தனர்.

இவ்வளவு ஆராய்ச்சிக்கும், அறிவின் மேம்பாட்டிற் கும், கல்வி வளர்ச்சிக்கும் காரணம் கட்புலனன்ருே. அதை கலைமகளாகச் சித்தரித்ததும் கட்புலனன்ருே? எனவே குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலையில், "விண் கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் விளம்பில் உன் போல், கண்கண்ட தெய்வமுளதோ" என்று பாடியுள்ளார் கள். கலைமகளுக்கென நவராத்திரியில் மூன்று நாள் விழா கொண்டாடுகிருேம். பாரத நாட்டில் மட்டுமே கண்கண்ட தெய்வமாகிய கல்விக்கும் கலைக்கும் வழிபாடு செய்யும் நாகரிகம் உள்ளது.

உள்ளம் இடையிடையே ஓம்பொருளை உன்னுவதைக் கள்ளமகல் வள்ளயிலன் காண்பதுவும் மெய்யாமே

Temple Trustees in Conference

This conference held recently is of momentous importance. The idols installed in these temples are borne over by a spiritual radiance, and for the worshipper, the idols are the avatars of God—archavataram. It is essential that the divine presence in the temples should be preserved by a strict adherence to the ancient code of rituals enjoined in the Agamas and now extant with minor differences as between temple and temple. The properties dedicated to the temples become property **extra commercium** and the conference would have been useful, indeed as it was, in the co-ordination of various temples in the matter of using the surplus wealth that gathers in the temple coffers from the divine overflow of bhakti of the devotees. It will be very relevant to consider two possible aspects in respectof the disposal of surplus temple wealth. The crying need is the comfort and convenience that can be provided for the visiting pilgrims and devotees. This is an aspect which requires the careful attention of the trustees. Every possible effort should be made to make things easy and comfortable for workshippers to visit temples and to assure to them an atmosphere of divine grace. This must be effected in manner that admits of equality of opportunity and approach, consistent with the **agama** rules and regulations, and that will exclude all irritations of preferences and priorities. Care must be taken to induce the common man, the labourer and the agricultural classes to visit temples, in fact to initiate and propagate the temple going habit amongst them. An atmosphere of serenity and silence in the main parts of the temple must be visibly perceptible for the devotees, within a

convenient circumference of the Holy of Holies. This may entail *greater* current expenditure, but will be a welcome method by which savings could *be reduced for the* betterment of the worshippers. Yet a second aspect would be that each of the big temples with largely endowed properties and income, may institute bhajana institutions all over, supervise them, and encourage them so that these Bhajana associations attached to the big temples of the land may co-operate with religious minded citizens to arouse, if not to stabilise the devotion and piety of a large class of our population living in the remote neglected villages, in condition not in keeping with the traditions of this country. The lead given by the Alwars, the Nayanmars and other Bhaktas must be continued by the temples at their cost. When they can meet the same out of the saved treasures of the temples, this will be a direct way by which Hindu religionists can be established in their original faith, whatever may be temptations of modern religious propaganda of other faiths and creeds. Most Hindus feel that there is no need for conversion. What is needed for the common man is faith and mental elevation and these with all their *salutory effect on character, can* best be secured by the active conversion of Bhajana Associations into agencies of spiritual and moral instruction. The wealth of the gods will be used for the spiritual benefit of all their worshippers. Active work in this direction will also save the temples from the danger of possible future governments attempting to divert trust funds of temples to temporal and other administrative purposes. Let us hope that there will be no such danger in the days to come. *—Thiruppugal Mani*

நெஞ்சினால் நினைந்தும், வாயினால் மொழிந்தும்,
நீதியல் லாதன செய்தும்,
துஞ்சினார் செல்லும் தொல்நெறி கேட்டே
துளங்கினேன்; விளங்கனி முனிந்தாய்!
வஞ்சனேன் அடியேன் நெஞ்சினில் பிரியா
வானவா! தானவர்க்(கு) என்றும்
நஞ்சனே! வந்துன் திருவடி யடைத்தேன்;
நைமிசா ரணியத்துள் எந்தாய் !!

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Regd. M. No. 5390, Amirthavachani (1957 கார்த்திகை—அமிர்தவசனி)

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அற்புத வரலாறு) (அச்சில்)			
சிவநேயச் செல்வர்கள் ,, ,,			
கணபதி பக்தர்கள் ,, ,,			
முருகனடியார் ,, ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press